Regd. No. 2975

ஸ்ரீ:

ஸ்ரீ ராமாநுஜன் - 353

ஆசிரியர்: P. B. அண்ணங்கராசாரியர். மஹாவித்வான்.

SRI RAMANUJAN

Editor:

Mahamahimopadhyaya

P. B. ANNANGARACHARYA, KANCHIPURAM-631503.

வருஷச் சந்தா 10 ரூ. ஜீவியச் சந்தா ரூ. 25

ஓராருளாளன் பெருந்தேவித்தாயார்
திருவடிகளே சரணம்.



ஆழ்வாரும்பெருமாளுஞ் ஜீயர்
திருவடிகளே சரணம்.

ஆழ்வார்கள் வாழி அருளிச்செயல் வாழி*
தாழ்வாது மில்குரவர் நாம்வாழி--ஏழ்பாரும்
முய்ய வவர்க ளுரைத்தகுவைகள் தாம்வாழி*
செய்யாமறை தன்னுடனே சேர்ந்து.

பிங்களவரு ஐப்பசிமீ . நவம்பர்மீ

ஸ்ரீ:

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

ஸ்ரீகாஞ்சீ நம்பிள்ளை மஹோத்ஸவ ப்ரகடனம் (பிங்களஹ 1977)

ஸ்ரீ காஞ்சீ தேவப்பெருமாள் ஸன்னிதியின் திருமுன்பே திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் **நம்பிள்ளைக்கு** நாளது கார்த்திகைமீ 1ஊ **(16-11-77)** புதன்கிழமை உத்தராட நக்ஷத்திரத்தில் திருவவதார மஹோத்ஸவம் தொடக்கமாகி கார்த்திகைமீ 10ஊ **(25—12—77)** வெள்ளிக்கிழமை திருக்கார்த்திகைத் திருநக்ஷத்திரத்திலே சாற்றுமுறையாகும். பத்து நாட்களிலும் அலங்கார திருமஞ்சனமும் இரண்டுவேளைகளிலும தீவ்யப்ரபந்தஸேவை கோஷ்டிகளும் ததீயாராதனமும் விசேஷ வைபவமாக நடைபெறும். வித்வான்களின் உபந்யாஸங்களும் நடைபெறும். ஆஸ்திகர்கள் அனைவரும்வந்திருந்து அநுபவித்து ஆனந்திக்கவேணும். இம்மஹோத்ஸவ ஸேவார்த்தமாக வெளியூர்களிலிருந்து வரும் பக்த பாகவதோத்தமர்களுக்கு ஸ்தலவசதி முதலிய ளௌகரியங்கள் விசேஷமாகச் செய்து கொடுக்கப்படும். ஸ்ரீ வைஷ்ணவ பக்த சிகாமணிகள் குழாங்கூடியிருந்து அநுபவிக்கக்கூடிய மஹோத்ஸவமிது.

சாத்துமுறையன்று ஸ்ரீ யதோக்தகாரி எம்பெருமான் புறப்பாடு கண்டருளி நம்பிள்ளை ஸன்னிதியிலெழுந்தருளியிருந்து நடைபெறும். இரண்டாயிரம் ரூபாய் செலவில் விசேஷ வைபவங்களுடன் நடைபெற்றுவருகின்ற இந்த மஹோத்ஸவத்திற்கு பக்தர்கள் உகந்து யதாசக்தி பொருளுதவி புரிந்து ஆசார்ய ஸார்வபௌம ருடைய இம்மஹோத்ஸவத்தை மிகவும் சிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இங்ஙனம்,

P. B ANNANGARACHARYA,
Founder, Sri Nampillai Sannidhi

சின்ன காஞ்சீபுரம்,
1—11—77.

ஸ்ரீ ராமாநுஜன் 353

ஆசிரியர்:
மஹாமஹிமோபாத்யாய ஸ்ரீகாஞ்சீ ப்ரதிவாதிபயங்கரம்
அண்ணங்கராசாரியர்

தொகுதி 30 | பிங்களவரு ஐப்பசிமீ 10—11—1977 | பகுதி—5

பிங்களவத்ஸர மங்கள வார்த்தைகளில்

எம்பெருமானும் எம்பெருமானரும்

ஆழ்வார்கள் தாங்களவதரித்த நாள்களிலும், வாழ்வான நாள் நமக்கு மண்ணுலகீர்!—ஏழ்பாருமுய்ய எதிராசருதித்தருளும் சித்திரையில் செய்ய திருவாதிரை என்றும் *நாற்றிசையுங்கொண்டாடும் நாள்* என்றும் நம் மணவாள மாமுனிகள் கொண்டாடின நன்னாளையொட்டி எம்பெருமானார்குணநுபவம்மீண்டும்செய்வோமிங்கு. எம்பெருமானரைப்பற்றி மூவகைப்பட்ட உல்லேகங்களைச் செய்வர் பெரியோர். (1) எம்பெருமானர் எம்பெருமானைக் காட்டிலும் தாழ்ந்தவர் என்பது முதல் உல்லேகம். (2) எம்பெருமானைக்காட்டிலும் மேம்பட்டவர் என்பது இரண்டாவதான உல்லேகம். (3) ஏற்றத்தாழ்வின்றியே எம்பெருமானும் எம்பெருமானரும் ஸமமானவர்களே யென்பது மூன்றுவதான உல்லேகம். இம்மூன்று உல்லேகங்களுக்குமுண்டான உபபத்திகளை இங்கு விவரிப்போம்.

1. எம்பெருமானர் எம்பெருமானைக்காட்டிலும் தாழ்ந்தவர் என்பது சாஸ்த்ரீய ஸரணியில் பொருந்துவதே. ஸர்வசேஷியான எம்பெருமானுக்கு அஸ்மதாதி நிர்விசேஷமாக ஸ்வாமி தாமும் சேஷப்பட்டவரேயன்றே. சரணாகதி கத்யத்தில் "தாஸபூதம், சரணாகதோஸ்மி தவாஸ்மி தாஸ இதி வக்தாரம் மாம் தாரய." இத்யாதி ஸ்ரீஸூக்திகளாலே எம்பெருமான் திறத்தில் தம்முடைய தாஸபாவத்தை உள்ளபடி அநுஸந்தித்திருக்கிற ஸ்வாமி, எம்பெருமானைக்காட்டிலும் தாழ்ந்தவர் என்றுரல் இதை விவரிக்க ஆவச்யகதையுண்டோ?

2. எம்பெருமானைக் காட்டிலும் மேம்பட்டவர் எம்பெருமானர் —என்றது எங்ஙனே யென்னில்; இஃது இராமாநுச நூற்றந்தாதியில் பல பாசுரங்களாற் பேசப் பட்டுள்ளது; இங்கு இரண்டு பாசுரங்களைக் கொண்டு மட்டும் இதனை மூதலிப்போம்.

அதில் நாற்பத்தோராவது பாசுரம் *மண்மிசை யோனிகள் தோறும் பிறந்து, எங்கள் மாதவனே கண்ணுற நிற்கிலுங் காணகில்லா வுலகோர்களெல்லாம் அண்ணலிராமானுசன் வந்து தோன்றியவப் பொழுதே நண்ணரு ஞானந் தலைக்கொண்டு. நாரணற் காயினரே* என்பது. எம்பெருமான் பல பல யோனிகளிற் பலவகைப் பிறவி பிறந்து கண்காண வந்து நின்று உபதேசங்களாலே ஸ்வரூபத்தைக் காட்டிக் கொடுத்த விடத்திலும் யாரும் அவனைப் பொருள் படுத்தவில்லை; *அவஜாநந்தி மாம் மூடா:* [என்னை மூடர்கள் அவமானப்படுத்துகிறார்கள்] என்று அவன் தானே சொல்லிக்கொண்டு வருந்த வேண்டியதாயிற்று. ஆகவே எம்பெருமானுடைய அவதாரம் ஸம்ஸாரிகளின் உஜ்ஜீவனத்திற்கு உறுப்பாகவில்லை. எம்பெருமானுருடைய திருவவதாரமோவென்னில், விரைவில் பயன்பெற்றது. இவர் அப்பெருமானைப்போலே 'என்னையே தொழுங்கள்; என் திருவடிகளையே தஞ்சமாகக் கொள்ளுங்கள்' என்னுமல் ''அவனையே தொழுங்கள்; அவனது திருவடிகளே உங்களுக்குத் தஞ்சம்'' என்றருளிச் செய்து போந்தவராதலால் ''அவஜாநந்தி மாம் மூடா:'' என்றும் ''ந மாம் துஷ்க்ருதிநோ மூடா: ப்ரபத்யந்தே நராதமா:'' என்றும் வருந்திச் சொல்லவேண்டிய ஸந்தர்ப்பம் ஸ்வாமிக்குச் சிறிதுமுண்டாகவில்லை. இதனால் எம்பெருமானைக் காட்டிலும் எம்பெருமானுர் மேம்பட்டவரென்னப் பொருந்தும்.

நூற்றந்தாதியில் அறுபத்தாருவது பாசுரம் 'ஞானங் கனிந்த நலங்கொண்டு நாடொறும் நைபவர்க்கு வானங் கொடுப்பது மாதவன், வல்வினையேன் மனத்திலீனங் கடிந்தவிராமானுசன் தன்னை யெய்தினர்க்கு அத்தானங் கொடுப்பது, தன் தகவென்னுஞ் சரண் கொடுத்தே* என்பது. இப்பாசுரத்தாலும் ஸ்வாமிக்கு ஒரு மேம்பாடு தெரிவிக்கப்படுகிறது. அடியார்களுக்கு மோக்ஷமளிக்கிற அதிகாரம் எம்பெருமானுக்கு முண்டு எம்பெருமானுர்க்குமுண்டு; எம்பெருமானளிப்பது மிகவும் சிரமப்படுத்தியே; எம்பெருமானுரளிப்பது, கேவலம் தம்முடைய திருவருளாலே யென்கிறது இதில். ஞானமானது நன்றுகக் கனிந்து அது பக்தி, பரபக்தி, பரமபக்தி என்னும்படியான பரிபாக அவஸ்தைகளையடைந்து அதனால் இந்தஸம்ஸாரத்தில் க்ஷணகாலமிருப்பதும் அஸஹ்யமாய் ஆழ்வார்களைப் போலத் துடிப்பவர்களுக்குத்தான் எம்பெருமான் முக்தியளிப்பது. எம்பெருமானுரோவென்னில் க்ருபாமாத்ர ப்ரஸந்நாசார்யராகையாலே அடியார்கள் பக்கலில் எவ்விதமான கிலேசத்தையும் எதிர்பாராமல் தமது திருவருளைக் கொண்டே அவர்களைக் கரையேற்றுபவராயிற்று. இச்சிறப்பினாலும் எம்பெருமானுர்க்குள்ள மேம்பாடு அறிய வெளிது.

3. *ஸாக்ஷாந்நாராயணே தேவ: க்ருத்வா மர்த்யமயீம் தநும், மக்நாந் உத்தரதே லோகாந் காருண்யாத் சாஸ்த்ரபாணிநா* என்றும் *பீதகவாடைப் பிரானுர் பிரமகுருவாகி வந்து* என்றுமுள்ள ப்ரமாணங்கள் ஸ்ரீமந் நாராயணனே ஆசார்ய ரூபேண அவதரித்து அருள் செய்வதாகச் சொல்லுகையாலே ஸாம்ய நிர்வாஹத்திற்கும் குறையில்லை. ஆனாலும், கர்மாநுகுணமாக லீலையிலும் விநியோகம் கொள்ளக் கடவனாய், ஸ்வ சரண கமல ஸமாச்ரயண தசையில் புருஷகாரம் வேண்டும்படியாயிருக்கும் எம்பெருமானைப் போலன்றியே, ஸ்வரூபாநுரூபமாகவே விநியோகம் கொள்ளுமவராய், ஸ்வாச்ரயணத்தில் புருஷகார நிரபேக்ஷராயுமிருக்கின்ற ஆசார்ய ஸார்வபௌமரே மேம்பட்டவரென்பதுதான் மிகச் சிறந்த ஸித்தாந்தம். ... ... *

தார்மிக ஹிந்துவில் கண்டதொன்று

தார்மிக ஹிந்துவென்னும் மாதாந்தப் பத்திரிகையில் நேற்றைப் புரட்டாசிமாத இதழில் முகப்பில் ஆசிரியர் ஸ்ரீமதுபயவே. து. க. ஜகந்நாதாசாரியர் ஸ்வாமி எழுதியுள்ள நீண்டதோர் கட்டுரையில் முதல் பாராவைமட்டும் ஈண்டு அநுவதித்துச் சில வார்த்தைகள் விஜ்ஞாபிக்க விரும்புகிறோம்.

"காஞ்சிபுரம் பிரதிவாதி பயங்கரம் ஸ்ரீ அண்ணங்கராசார்யர் ஸ்வாமியின் கடிதம்

சென்ற இதழில் '(தென்கலை) தத்வார்த்த நிரூபணம்' என்ற தலைப்பில் எழுதிய விமர்சத்தைப்பற்றி காஞ்சீபுரம் ஸ்ரீ ஜகதாசார்ய மஹாமஹிமோபாத்யாய ஸ்ரீ ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ அண்ணங்கராசார்யர் ஸ்வாமி, மிக அன்புடன் ஒரு சிறிய கடிதத்தை நமக்கு எழுதியிருக்கிறார். அதில் இந்த மறுப்பு நூலாகிய " தத்வார்த்த நிரூபணம் " ஸ்ரீ ராமானுஜன் அச்சிடப்படும் அச்சகத்திலேயே அச்சிடப்பட்டு வெளிவந்துள்ளதாக நாம் எழுதியிருப்பது தவறு என்பதை நமக்கு அவர் அதில் சுட்டிக் காண்பித்திருக்கிறார். இது நியாயம்தான். இதற்காக நாம் அவருக்கு நம் நன்றியை மிக வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். ஆகாரம் முதலிய பொதுத்தோற்றத்திலும், எழுத்துக்களின் பார்வையிலும், இதுவும் ஸ்ரீ ராமானுஜனைப்போலவே காணப்படுவதால் இதுவும் அந்த அச்சகத்திலேயே அச்சிடப்பட்டிருக்கக்கூடும் என்று சிறிது அவசரப்பட்டு நினைத்துத்தான் அவ்வாறு எழுதிவிட்டோம். அத்தவறுக்காக நம்மை ஸ்ரீ ஸ்வாமி தயைபுடன் க்ஷமித்தருளவேண்டுமென்று அவரைப் பிரார்த்தித்துக்கொள்கின்றோம்."

முந்துறமுன்னம் ஒரு முக்கிய விஜ்ஞாபனம்

அஸ்மதாசார்யரான ஜகத்குரு காதி. அனந்தாசாரியர் ஸ்வாமி திருநாட்டுக் கெழுந்தருளி ஐம்பது வருஷமாகிறது. அந்த ஸ்வாமி ஸன்னிதியில் இவ்வாசிரியர் (ஜகந்நாதாசாரியர் ஸ்வாமி) சில ஸமய விசேஷங்களில் எழுந்தருள்வர். அந்த ஸ்வாமிக்கு இவரிடத்தில் விசேஷமான மதிப்பு இருந்ததை நேரில் கண்டிருக்கிறேன். "அநீதியாக யார் எது எழுதினாலும் நிர்தாக்ஷிண்யமாக-உபபத்தி புஷ்கலமாக மறுப் பெழுதுபவர் இவர்" என்று உகந்து ஸாதிக்கக் கேட்டிருக்கிறேன். அதுமுதலாக இந்த ஸ்வாமியிடத்தில் நாமும் உண்மையாக மனமார்ந்த மதிப்பு வஹித்திருக்கிறோம். இந்த மஹாஸ்வாமி "...தவறுக்காக நம்மை ஸ்ரீ ஸ்வாமி தயையுடன் க்ஷமித்தருள வேண்டுமென்று அவரைப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறோம்" என்றெழுதி வெளியிட்டிருப்பதைக் கண்டு நாம் மிகமிக வருந்துகின்றோம். க்ஷமைவேண்டுவதற்கு ப்ரஸக்தி லேஶமுமில்லை-ஸ்வாமி தவறுக ஒன்றும் எழுதிவிடவில்லை. இந்த க்ஷமாப்ரார்த்தனையை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை யென்பதை ஸவிநயம் விஜ்ஞாபிக்கிறோம்.

... ...

சில மாதங்களுக்கு முன்பு ஸ்ரீரங்கம் அட்வகேட் ஒருவர் காஞ்சீபுரம் தேவப் பெருமாள் தேவஸ்தானத்தைப்பற்றி ஆங்கில பாஷையில் வெளியிட்டிருந்த ஒரு சிறு சுவடிக்கு மறுப்பாக ஸ்ரீமான் உ. வே. (கபிஸ்தலம்) கோயில் பிரதிவாதி பயங்கரம்

ரங்காசாரியர் ஸ்வாமி வெளியிட்டிருந்த தத்வார்த்த நிரூபணமென்னும் நூலைப்பற்றி ஷே தார்மிக ஹிந்துவின் ஆவணிமாதவிதழில் ஒரு கட்டுரை வெளிவந்திருந்தது அதைப் பெரும்பாலும் பலரும் வாசித்திருப்பர்கள். இப்போது புரட்டாசியிதழில் வெளி வந்ததையும் வாசித்திருப்பர்கள். ஆங்கிலத்திலெழுதி வெளியிட்ட அட்வகேட்டின் சிறு சுவடியைப்பற்றி ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சன பத்திரிகையில் பத்ராதிபஸ்வாமி மிக விரிவாக எழுதியிருந்த ஆராய்ச்சிக் கட்டுரையை உலகம் முழுவதும் வாசித்திருக்கு மென்றே நம்புகிறேம். அதனுல் அவ்வாங்கிலச்சுவடிக்கு மறுப்பாக வெளிவந்த தத்வார்த்த நிரூபண நூலில் எழுதப்பட்டுள்ள விஷயங்கள் மிக்க பொருத்தமுடையன வென்பதையும், அவை அவசியம் எழுதப்படவேண்டியவையே என்பதையும் உலக முணர்ந்திருக்கும். சென்னையில் வாழும் ஸ்ரீமான் டாக்டர் ராமன் என்பவர் மஹா மேதாவி யென்று வைதிக லௌகிக உபய கோஷ்டியிலும் மிக்க பெரும்புகழ்பெற்றவர். அவர் காஞ்சீபுரம் ஸ்ரீ தேவராஜஸ்வாமி தேவஸ்தான விஷயமாகப் பல பல சிலா சாஸனங்களைக்கொண்டு மிகப் பெரியதோர் ஆராய்ச்சி நூல் (ஆங்கிலத்தில்) வெளி யிட்டிருந்தார். எழுதியதுமட்டும் அவர்; வெளியிட்டது அரசாங்கம் என்று கேள்வி. அதன் விலை (90) தொண்ணூறு ரூபாய். அந்த நூலுக்கு மறுப்பு எழுதவேணுமானுல் காஞ்சீபுரவாஸியான ஒரு பிரமுகர் எழுதவேணும். அப்படிக்கு ஒருவரும் முன்வர வில்லை. காஞ்சீபுரம் இன்னதிக்கிலுள்ளது என்பதுகூட அறியாத வொருவர் அதற்கு மறுப்பெழுதும் பணியில் தலையிடவேண்டிய அவசியமே யில்லை. அநாவச்யகமாக எழுதப் புகுந்ததுமன்றியில் உலகம்போற்றநின்ற மஹாசார்யர்களை வலுவில் பிடித் திழுத்து, விரலுக்குத்தகாத வீக்கமென்னும்படியாக, அவர்களுடைய ஞானத்தில் குறைகூறி மனம் போனபடியும் கைபோனபடியுமெல்லாம் எழுதியிருந்தது மிக்க ஸாஹஸம். ஸ்வாமி தேசிகனுக்குப் பெரியவாச்சான்பிள்ளையின் திவ்யஸூக்திகளில் எவ்வளவு ஆதரம் என்பதை மாச்சரியமற்ற மஹாபண்டிதர்கள் அறிவர். அவருடைய ஸ்ரீஸூக்திகளைக்கொண்டே தேசிகன் வேதாந்தவிழுப்பொருள்களில் நல்ல தெளிவு பெற்றுரென்பதை மறுக்கப் பிராமாணிகரொருவரும் முன்வரமாட்டார். "செய்ய தமிழ் மாலைகள் நாம் தெளியவோதித் தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றுமே" என்று ஸாதித்தருளின தேசிகன் திருவுள்ளம் உண்மையாக எத்தகைத்தென்றால், பெரிய வாச்சான்பிள்ளை யிட்டருளின திவ்யப்பிரபந்த வியாக்கியானங்களை யோதித் தெளி கின்றேம் என்று தெரிவிப்பதேயாம். ஸச்சரித்ர ரக்ஷையில் பெரியவாச்சான்பிள்ளையை ஆசார்யர் என்றே நிர்தேசித்தருளியிருப்பதைப் பலகால் எடுத்துக்காட்டியிருக்கிறேம். இதில் வாய்திறக்க வழியில்லை யொருவர்க்கும். அப்படிப்பட்ட மஹாசார்யர்க்கு 'அது தெரியாது, இது தெரியாது' என்றெழுதுவது எவ்வளவு ஸாஹஸம்! இது நிற்க.

தார்மிக ஹிந்துவின் ஆசிரியர் விமர்சிக்கக் கொண்ட தத்வார்த்த நிரூபண நூலானது ஸ்ரீமத் கபிஸ்தலம் ஸ்வாமியினுலேயே பூர்த்தியாக எழுதப்பட்டதன்று; ஸ்ரீரங்கம் மெ. ஸுந்தரராஜாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ வேதவ்யாஸபட்டர்ஸ்வாமி, அடியேன் (P B A) ஆக மூவர் பலவாண்டுகட்கு முன்பு எழுதி வெளியிட்டிருந்த நூல்களிலிருந்து பல பகுதிகளைப் பக்கம் பக்கமாக அநுவதித்துள்ளது தத்வநிரூபண க்ரந்தம். வாக்ய சைலியை நோக்குமிடத்து எல்லாம் ஒருவ்யக்தியின் வாக்காகவே காணப்படுவதாக தார்மிக ஹிந்து வாசிரியர் தமது கருத்தை வெளியிடுகிறார். பகவத்கீதையில், த்ருத

ராஷ்ட்ரன், ஸஞ்ஜயர், அர்ஜுநன், கண்ணன் இந் நால்வருடைய சுலோகங்கள் உள்ளன. ஸ்ரீ ராமாயணத்தில் பரச்சத வ்யக்திகளின் சுலோகங்கள் உள்ளன. வசன வைகரியைக்கொண்டு வேற்றுமை கண்டுபிடிக்க முடிகிறதா? மஹாபாரத முட்பட இதிஹாஸ புராணங்களெல்லாம் ஒரே வாக்சைலியாகத் தென்படவில்லையா? ஸாகுந்தலம் முதலான நாடகங்களில் பெண்டிர் பேச்சுக்கு ப்ராக்ருத பாஷை, செம்படவன் பேச்சுக்குப் பைஸாசபாஷை..... இப்படி வேற்றுமை காட்டப்பட்டுள்ளது. அப்படிப் பட்ட வாசியும் ஸ்ரீ ராமாயண பகவத்கீதாதிகளில் ஏ துமே காட்டப்படவில்லை ராம லக்ஷ்மண பரதாதிகளின் வார்த்தைகள், சூர்ப்பணகா, மந்தோதரீ, அநஸூயா, சபரீ, தாரா ப்ரப்ருதிகளின் வார்த்தைகள்..... இப்படியாகவுள்ள பரஸ்பர விஜாதீயர்களின் வார்த்தைகளத்தனையும் ஸாலீபரீக்ஷகர்களுக்கு ஒரேவிதமாகத் தோன்றவில்லையா?

இவர்கள் நினைக்கிறபடியே யிருக்கட்டும். அந்த நிரூபண நூலில் தவருன விஷயங்களிருந்தால், உள்ள தவறுகளை யெடுத்துக்காட்டுவதும், விஞக்களிருந்தால் அவற்றுக்கு விடை யிறுப்பதும், மற்றும் ஸாஸ்த்ரீய ஸரணியில் விமர்ஸங்கள் செய்வது மன்றே பத்திராதிபர்களுக்கு ஒழுங்கான முறை. தத்வார்த்த நிரூபணகாரரான ஸ்ரீமத் கபிஸ்தலம் ஸ்வாமி அதில் (பக்கம் xviiiல்) எழுதியிருப்பதாவது—

"ஆஸ்திகப்பெருமக்களே! ஏழெட்டுமாத காலமாக ஆங்காங்கு ஸ்ரீ வைஷ்ணவ ஐக்கிய மகாநாடுகள் கூடி ஒற்றுமையியக்கத்தைப் பிரபலமாகப் பிரசாரம் செய்துவரு மிக்காலத்தில் இத்தகைய விஷயங்களைப் பிரசாரம் செய்வதில் நமக்கு எள்ளளவும் ருசியில்லை. திருச்சி அட்வகேட் ஸ்வாமி டாக்டர் ராமனுடைய நூலுக்குப் பதில் எழுதுவதாக எழுந்து அதற்கு ஸம்பந்தப்படாத வீண் வம்பு விஷமங்களைப் புகுத்தி வைத்திருப்பதால், அவற்றுல் பாமரர்கள் ஏமாற்றமடையாதபடிக்கு உண்மையான விஷயங்களை விளக்கவேண்டிப் பழைய புராணங்களை எடுத்துக்காட்ட வேண்டிய தாயிற்று. வாஸ்தவமாகத் திருச்சி அட்வகேட் அக்னிஹோத்ரி ஸ்வாமியின் உபதேசங் களைக் கொள்ளாதிருந்தால் இவ்வளவு வளர்ச்சி ஏற்பட்டிராது. அவர் சொந்தமாக வெளியிட்டிருக்கிற ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாய துஷணைகள் போதாமல் இந்த அட்வகேட்டின் பெயராலும் இப்படிப்பட்ட ஆபாஸங்களை வளர்த்தியிருக்கிறார்: அட்வகேட் ஒரு பாவபுமறியார் என்றே ஸ்ரீரங்கவாஸிகள் சொல்லக் கேள்வி" என்று.

தார்மிகஹிந்துவாசிரியர் இந்தப் பாராவை விமர்சிக்கவேண்டுவது அவசிய மல்லவா? வைணவ ஐக்கிய மகாநாடுகளுக்கு முரணுக அஸம்பத்த விஷயங்களைப் பரப்பினவரைப்பற்றி இவர் ஏதேனுமெழுதியிருக்கிறாரோ? மேலே அநுவதித்த பாரா வுக்கு அடுத்தபடியாக ஸ்ரீமத் கபிஸ்தலம் ஸ்வாமி "இதோரற்புதங் கேளீர்!" என்று தொடங்கி யெழுதியிருப்பவற்றையும் இங்கெடுத்துக்காட்டுகிறேன் காண்மின்; 'பெரிய வாச்சான்பிள்ளைக்கு ஸ்ரீபாஷ்ய பரிசயம் போதாது' என்று அட்வகேட் எழுதியிருந்ததன் மேல் எழுதப்பட்டவையாதலால் மேல்அநுவதிக்கப்படுமவற்றை அவசியம் காண்மின்

"இதோரற்புதங்கேளீர்; ஸ்ரீரங்கம் வக்கீல் எழுதுகிறார்—"பிள்ளானுடைய ஆறுயிரப்படியையும் வடக்குத் திருவீதிப்பிள்ளையின் மூப்பத்தாறுயிரப்படியையும் தென்

கலையார் ஆதரிப்பதில்லை; பெரியவாச்சான்பிள்ளையின் வியாக்கியானத்தையே ஆதரிக்கிறார்கள்''—என்று. இது அப்படியே உண்மையாகவே யிருக்கட்டும். இதற்குக் காரணம் தெரியுமோ? கேளும். பராக்கற்று உற்றுக்கேளும்; தேசிகனுக்கு ஆருயிரப்படி என்று ஒரு வியாக்கியானம் அவதரித்திருந்ததென்பதே தெரியாது. தெரியாதென்பதை ஆயிரந்தடவை சொன்னாலும் எழுதினாலும் புநருக்தி துஷ்டமாகாது. ''தேசிகனுக்கு ஆருயிரப்படி தெரியும்'' என்று யார் நிரூபித்தாலும் அவர்க்கு ஆருயிரம் ரூபாய் செலுத்தத் தடையில்லை என்று சபதம் செய்திருப்பார் பலருண்டு; அந்த சபதத்தை நானும் செய்கிறேன். ஈடு முப்பத்தாருயிரப்படி தேசிகனுக்கு முன்னே திருவவதரித்திருந்தாலும் அந்த வியாக்கியானம் தேசிகன் காலத்தில் பிரசாரம் பெறவில்லை யென்பது, உபதேசரத்தினமாலையில் *சீரார்வடக்குத் திருவீதிப்பிள்ளை* *ஆங்கவர்பால்பெற்ற* என்றுள்ள இரண்டு பாசுரங்களினால் ஸ்பஷ்டம். ஆகவே தேசிகன் பெரியவாச்சான்பிள்ளை யருளிச்செய்த இருபத்துநாலாயிரப்படி வியாக்கியானத்தையே தாம் காலக்ஷேபம் செய்தருளினார். பெரியவாச்சான்பிள்ளை யருளிச்செய்த வியாக்கியானங்கள் தேசிகன் காலத்தில் ப்ரவசன பரம்பரையிலிருந்தனவென்பது தேசிகனுடைய ஸ்ரீஸூக்தியினாலேயே ஸ்பஷ்டமாகிறது. ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்தில் பெரிய திருமொழி (1-1-9) *குலந்தருமென்கிற பாசுரத்தின் வியாக்கியான பங்க்திகளை யுதாஹரித்து ''இப்படி அபியுக்தர் வியாக்கியானம் பண்ணினார்கள்'' என்று எழுதிவைத்திருப்பது குன்றிலிட்ட விளக்காக இராநின்றதன்றே? அன்றியும், தேசிகன் பணித்தருளின த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளியும் ஸாரமும் பெரியவாச்சான்பிள்ளையின் வியாக்யானத்தைக்கொண்டே [அதனை யடியொற்றியே] ஸாதிக்கப்பட்டனவென்பது கல்வெட்டா யிருப்பதாம். ஆகவே, தேசிகன் தாம் காலக்ஷேப க்ரந்தமாகக்கொண்ட பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானத்தையே தென்கலையார்கள் விசேஷித்து ஆதரிப்பதை இந்த அட்வகேட் ஸந்தோஷமாக எழுதவேண்டியவரேயொழிய குற்றச்சாட்டாக எழுதுவது அசட்டுத்தனமாகும் என்பதில் ஐயமில்லை. இவர் தாம் பெரிய ஸ்ரீபாஷ்யாதிகாரிபோல, பெரியவாச்சான் பிள்ளைக்கு ஸ்ரீபாஷ்ய பரிசயம் போதாது என்றெழுதுகிறார். ஸர்வஜ்ஞர்களான ஆசாரியர்களைப்பற்றி ப்ரஸங்கிக்க இவரா அதிகாரி? ''தர்க்கபாண்டித்யத்தாலே நிஜனத்ததெல்லாம் ஸாதிக்கவல்லோம்'' என்றெழுதிவைத்து அப்படியே ஸாதித்தவர்களின் தர்க்கபாண்டித்யம் எவர்க்குமில்லைதான். மீமாம்ஸா சாஸ்த்ர யுக்மச்ரம விமலமநா: ம்ருக்யதாம் மாத்ருசோந்ய:* என்ற ஆளவந்தார் போல்வார்க்கும் இல்லைதான். எம்பெருமானுடைய வ்யாப்தி விஷயத்தை விசாரிக்கப் புகுந்து ஸ்ரீ நியாயஸித்தாஞ்ஜநத்தில் *க்ருத்ஸ்நப்ரஸக்திர் நிரவயவத்வசப்தகோபோ வா* என்கிற ஸித்தாந்த ஸூத்ரத்தையுமெழுதி *அத: யதாகமம் ஸர்வத்ர பூர்ண ஏவ* என்றெழுதிவைத்து, ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்தில் இந்த ஸூத்ரத்தை மறந்தோ உபேக்ஷித்தோ *வஸ்து தோறும் பரிஸமாப்தியன்று* என்று எழுதிவைத்தவர்களுக்கே ஸ்ரீபாஷ்யத்தில் ப்ரசண்டபாண்டித்யமிருக்கட்டுமே. அப்படிப்பட்ட பாண்டித்யம் பெரியவாச்சான்பிள்ளைக்கு இல்லைதான்.

ஒரு ஸ்வாமி காலை வேளைகளில் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸார ப்ரவசனமும், பகல் வேளைகளில் நியாயஸித்தாஞ்ஜந ப்ரவசநமும் செய்து போருகிறார். ஒருநாள் காலையில் மூலமந்த்ராதிகார ப்ரவசநமாகும்போது "வ்யாப்தனுக்கு ப்ரதிவஸ்து பூர்ணத்வமாவது ஓரொரு உபாத்யவச்சிந்நப்ரதேசமே ஸர்வத்தையும் நிர்வஹிக்க வல்ல சக்தியுடைத்தாயிருக்கை; அல்லது வஸ்துதோறும் ஸ்வரூபஸமாப்தியன்று; இது கொள்ளில் பஹிர்வ்யாப்திக்கு விருத்தமாம்" என்கிற பங்க்திகளை ஸேவித்து அர்த்தம் ஸாதித்தாயிற்று. அன்றைக்கே பகலில் நியாயஸித்தாஞ்ஜந ப்ரவசநத்தில் *ச்ருதேஸ்து சப்தமூலத்வாத்* .....இத்யாதிகளை ஸேவிக்கையில் 'காலை கேட்டதற்கும் இப்போது கேட்பதற்கும் முரண்பாடு காண்கிறதே! எப்படி ஸமாதானம்?' என்று சிஷ்யர்கள் கேட்க, 'அதுவொருபக்ஷம், இதுவொருபக்ஷம், விரோதமென்ன?' என்று ஸாதித்தாராம். அதுகேட்ட சிஷ்யர்கள் த்ருப்தி பெருமல் முகம் கடுத்திருந்தார்களாம். பின்னையும் ஸ்வாமி ஸாதித்ததாவது— "நீங்கள் அஸ்தானத்திலே மயங்குகிறீர்கள்; ஒருஸமயம் சுக்லபக்ஷே என்றும், மற்றொரு ஸமயம் க்ருஷ்ணபக்ஷே என்றும் சொல்லுகிறோம்; அவ்வளவேயா? ஒரு ஸமயம் மீநமாஸே என்கிறோம், மற்றொரு ஸமயம் மிதுநமாஸே என்கிறோம். சொன்னதையே சொல்லிக்கொண்டிருக்க முடியுமா? ஒருவேளை *யதஹ்நா பாபமகார்ஷம்* என்கிறோம். மற்றொருவேளை *யத் ராத்ரியா பாபமகார்ஷம்* என்கிறோம். இப்படி ஒன்று இரண்டா? ஆயிரம் பதினாயிரமன்றோ? இவற்றில் முரண்பாடு ஸங்கிப்பாருண்டோ? என்று விரிவாக ஸாதித்து 'இப்போது ஸமந்வயமாயிற்று?' என்று கேட்க, நன்றாக ஆயிற்று என்றார்களாம்."

அத்வார்த்த நிரூபணத்திலிருந்து இப்படி நாம் எடுத்துக்காட்டவேண்டிய விஷயங்கள் மற்றும் பலபல விருந்தாலும் இவ்வளவே போதுமிப்போது. நம்முடைய பல நூல்களில் எழுதப்பட்டிருந்த விஷயங்களே உருமாற்றி எழுதப்பட்டவை இவை. இவற்றை நாம் விநயத்தோடு வினவுகிற ஸந்தேஹப்ரச்னங்களாகக்கொண்டு விடையளிக்கவல்ல வித்வான்களை இதுகாறும் கண்டிலோம். நிந்தாபரிஹாஸாதிகளை அறவே விட்டிட்டு ப்ராமாணிகஸரணியில் எழுதக்கூடியவர் நமது ஸுஹ்ருந்மணியான தார்மிக ஹிந்து வாசிரியர் ஒருவரே யென்பது நமது நம்பிக்கை. ... ... *

— வாஸுதேவ: ப்ரஸீதது. —

இலவசமா? இலவசமா?

ஒருவரிடம் உயர்ந்த பொருளொன்றைக் கண்டவர் "இது மிக நன்றாயிருக்கிறதுடா; எங்கே வாங்கினாய்? என்னவிலை?" என்று கேட்க; நான் விலைகொடுத்து வாங்கவில்லை; இலவசமாகக் கிடைத்தது" என்று சொல்லி, கிடைத்தபடியைக் கூறுகிறவர். விலையில்லாமல் இனாமாகக் கிடைத்தது என்பதே அதன்பொருள். இலவசம் என்னுஞ்சொல்லுக்கு (இனம்) என்கிற பொருள் எப்படி கிடைக்கும்? என்று ஒருவர் நேற்று நம்மைக்கேட்டார். இதைப்பற்றி இளமையில் திருத்தகப்பனாரிடம் கேட்டிருந்ததை எழுதுகிறேன். (ஒரு சிறுகதை) ஒருவர் தனிகரான தமதுநண்பரிடத்தில் நூறு ரூபாய் கடனாக அபேக்ஷித்தார். அண்டிமாண்டு எழுதிக் கொடுப்பதாகக் கூறினார்; அந்தத் தனிகர் யார்க்கும் கடன் கொடுப்பதில்லை யென்கிற விரதமுடையவர்; கடன்

கேட்டவர்க்கு ஏதாவது உபகரிக்கவேணுமென்கிற ஆசையுங்கொண்டவர். ஆகவே அவர் என்ன செய்தாரென்னில்; தாம்கொடுக்க விரும்பின தொகையைத் தாம்பூலத்தில் வைத்துக் கொடுத்தார். அவரும் ஸந்தோஷமாகப் பெற்றுக்கொண்டார். கடனுகக் கொடுப்பவர் தாம்பூலத்தில் வைத்துக் கொடுக்கமாட்டார். இனுமாகக் கொடுப்பதை வெறுமனே கொடாமல் தாம்பூலத்தில் வைத்தே கொடுப்பர். ஆகவே, இலவசமாக—வெற்றிலே வசமாக; இனுமாக என்றதாயிற்று. அந்தச் சொல்லே இலவசமாகவென்று மாறிற்று. இதை மரூஉமொழியென்றுங்கொள்ளலாம். நிலயாக என்கிற வடசொல்லே நிலையம் என்றே தமிழில் எழுதிவருகிறார்கள். அதைத் தவருக நினைக்கவேண்டாம். அப்படியே இலவசம் என்பதையும் தவருக நினைக்கவேண்டாம். ... ... *

வெளியீட்டு விளம்பரம்

ஸ்ரீ ராமாநுஜன் சென்றவிதழில் ராப்பர் இரண்டாவது பக்கத்தில் "விசேஷ அறிவிப்பு" என்ற தலைப்பின்கீழ் நாம் வெளியிட்டிருந்ததாவது—"ஸ்ரீமத் வரவரமுனி வர்ய ஸித்தாந்தஸாரம்-என்கிறநூல் அடியேனுல்(PBA)எழுதிஅச்சிடப்பட்டு மாமுனிகளின் உத்ஸவத்தில் அரங்கேற்றம் செய்யப்படும்" என்பதாக. அந்தநூல் அச்சிட்டு முடிக்கப்பட்டது. ஆனுல் அது ஸ்ரீ ராமாநுஜனில் சேர்க்கப்படாமல் தனிப்புத்தகமாகவே ஸித்தப்படுத்தப்பட்டது. ப்ரஸித்த வித்வான்களுக்குமட்டுமே அனுப்பப்பட்டு வருகிறது. விருப்பமுள்ளவர்கள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு **3** ரூபாய் (போஸ்டேஜ் உட்பட) அனுப்பிப் பெறலாம். **தி. அ. அனந்தார்வான்.**

24, தென்னண்டை மாடவீதி, காஞ்சீபுரம்-631 503.

ஸ்ரீவைஷ்ணவவுலகுக்குப் பெருந்துயரம்

ஸ்ரீமதுபயவே. திருமலே விஞ்சிமூர். (காவல்கழனி) அனந்தாசாரியர் ஸ்வாமியென்பவர் திருவல்லிக்கேணியில் எழுந்தருளியிருந்தவர், தென்னுட்டிலுள்ள ஸகல ஸ்ரீவைஷ்ணவர்களும் இந்த ஸ்வாமியை நன்கறிவர்கள். இவர் 25—10—77 செவ்வாய்க்கிழமை 12 மணிக்கு தமதுதிருமாளிகையில் அநாயாஸமாகத் திருநாட்டுக்கெழுந்தருளின செய்தியை யறிவிக்க மிகமிக வருந்துகிறேம். பரமபதிப்பதற்குச் சில நாழிகை முன்வரையில் ஸ்ரீபார்த்தஸாரதி ஸ்வாமி ஸன்னிதியில் அன்பர்களோடு ஸஹஜமாக வார்த்தை சொல்லிக்கொண்டிருந்தார். பாம்பே பனஸவாடியில் ஸ்ரீகாஞ்சீ. ஜகத்குரு ப்ரதிவாதிபயங்கரஸ்வாமியின் ஸ்ரீவேங்கடேச தேவஸ்தானத்தில் ஸமீபத்தில் நடந்த திருவேங்கடமுடையான் ப்ரஹ்மோத்ஸவத்திற்குச் சென்றிருந்து முதல்நாள்தான் திரும்பிவந்து சேர்ந்தார். இளமையில் திருத்தகப்பனுரோடுகூட ஸ்ரீகாஞ்சியிலேயே வாழ்ந்திருந்து வித்யாக்ரஹணம் செய்தார். ஆழ்வார்களருளிச்செயலில் அத்விதீய நிபுணர். ஸ்ரீபார்த்தஸாரதி ஸன்னிதி கைங்கரியங்களில் ஒத்தாருமிக்காருமின்றி ஈடுபாடுடையராயிருந்தவர். 25 வருஷங்களுக்குமேல் சென்னையில் டிப்டி—தாசில்தாராயும், தாசீல்தாரராயும் பணியாற்றிச் சிலமாதங்களுக்கு முன்புதான் ஓய்வுபெற்றார். ஆகஸ்மிகமாக நேர்ந்த இவருடைய வியோகம் ஸ்ரீவைஷ்ணவ ஸமூஹத்துக்கெல்லாம் ஆற்றவொண்ணுத துயரம். விசேஷித்து ஸ்ரீபார்த்தஸாரதி யெம்பெருமானுக்கே. *

— உபந்யாஸக ஸௌபாக்யமர்லே —

இதிஹாஸபுராணங்களில் வினாவிடைகள் (முன்தொடர்ச்சி)

[வினா] ஸீதாபிராட்டி தனக்குச் சிறியதோர் அபராதமும், பெரியதோர் அபராதமும் உண்டு என்றாளே; அது எங்குள்ளது? அவ்வபராதங்கள் எவை?

[விடை] திருவடியை நோக்கிச் சொல்லும் வார்த்தைகளில் *மமைவ துஷ்க்ருதம் கிஞ்சித் மஹத் அஸ்தி ந ஸம்ஶய:, ஸமர்த்தாவபி தௌ யந்மாம் நாவேக்ஷேதே பரந்தபௌ* என்றாள் பிராட்டி; பெருமாளும் இளையபெருமாளும் எனக்கு நேர்ந்துள்ள கஷ்டத்தைத் தெரிந்து கொள்ளவும், விரோதிநிரஸனம்பண்ணி என்னைச் சேர்த்துக் கொள்ளவும் ஸமர்த்தர்களாயிருக்கச் செய்தேயும் என்னைக் கண்ணெடுத்துப் பாராமலிருப்பதனால் எனக்கு பகவதபசாரமாகிற சிறியதொருபாபமும், பாகவதாபசாரமாகிற பெரியதொரு பாபமும் உள்ளதென்று நிச்சயிக்கவேண்டியதாகிறது—என்றாளாயிற்று. கிஞ்சித் என்னும்படியான துஷ்க்ருதம் எது? மஹத் என்னும்படியான துஷ்க்ருதம் எது? என்னில்; பெருமாள் காட்டுக்குப் புறப்படுவதற்குமுன் பிராட்டியைச் சந்தித்து வார்த்தையாடுகையில், ,நான் தந்தை தாயரின் கட்டளைப்படி காட்டுக்குப்போக நேர்ந்திருக்கிறது, போய் வருகிறேன், நீ நகரத்திலேயே மாமியார் மாமனார்க்குப் பணிவிடை செய்துகொண்டிரு' என்றுகூற, பிராட்டி தன்னையும் உடனழைத்துக்கொண்டு செல்லுமாறு நிர்ப்பந்திக்க, இராமன் காட்டின் கொடுமைகளைக்கூறி மறுத்தபோது, [*ப்ரணயாச் ச அபிமானாச் ச பரிசிக்ஷேப ராகவம்*]—*கிம் த்வா அமந்யத வைதேஹ: பிதா மே மிதிலாதிப:, ராமஜாமாதரம் ப்ராப்ய ஸ்த்ரியம் புருஷவிக்ரஹம்*—என் தகப்பனார் ஆணுடையுடுத்துவந்த பெண்பிள்ளையாகிய உம்மை ஆணென்று மயங்கிக் கந்யகாதானம் செய்துவிட்டாரே! என்னெருத்தியைக் காப்பாற்றமாட்டாத நீர் ஒரு ஆண்பிள்ளையா?' என்று ப்ரணயரோஷம் தலையெடுத்துக் கடிந்து கூறியது (அயோத்யாகாண்டம் முப்பதாவது ஸர்க்கத்தில்) காணத்தக்கது, இந்த பகவதபசாரம் [கிஞ்சித் துஷ்க்ருதம்] என்றதற்கு இலக்கு. மேலே ஆரண்யகாண்டத்தில் மாரீசமாயாமிருகத்தின் மாயக் கூக்குரலைக்கேட்ட பிராட்டி இராமபிரானுக்கு வலியதோர் விபத்து விளைந்திட்டதாக மருண்டு இளையபெருமாளைக் கடிந்து கூறியது, அதில் பரதாழ்வானையும் சேர்த்து அதிக்ஷேபித்தது—இவை 'மஹத் துஷ்க்ருதம்' என்றதற்கு இலக்கு, (இது ஆரண்யகாண்டம் நாற்பத்தைந்தாம் ஸர்க்கத்தில் காணத்தக்கது.)

[வினா] பகவதபசாரத்தை மஹத்தாகவும், பாகவதாபசாரத்தைச் சிறிதாகவும் சொல்லலாகாதோ? பகவான் ஸர்வோத்க்ருஷ்டனுகையாலே அவன் திறத்தில் நேரும் அபசாரத்தைச் சிறிதென்று சொல்லலாமோ?

[விடை] பெரியோர்களிடத்துக் கேட்டதை விஜ்ஞாபிக்கிறேன். கண்ணபிரான் பாண்டவர்களுக்காகத் தூதியோதனரிடம் தூதெழுந்தருளினபோது *விதுராந்நாநி புபுஜே சுசீநி குணவந்தி ச* என்கிறபடியே விதுரர் திருமாளிகையிலே அமுது செய்துவிட்டு அங்கே யெழுந்தருள, *பீஷ்மத்ரோணுவதிக்ரம்ய மாஞ்சைவ மதுஸூதந!, கிமர்த்தம் புண்டரீகாக்ஷ! புக்தம் வ்ருஷலபோஜநம்'—ஜ்ஞாநாதிகரான பீஷ்மா

சாரியரையும், ஜாதியில் உயர்ந்த த்ரோணாசார்யரையும், செல்வத்தில் சிறந்த என்னையும் உபேக்ஷித்துவிட்டு ஒரு சூத்ரனுடைய சோற்றை யுண்டது என்னே ? இது செய்யத்தகுமா ? என்று கேட்க, அதற்கு ஸமாதானமாக *ந சூத்ரா பகவத்பக்தா: விப்ரா பாகவதா: ஸ்ம்ருதா:* இத்யாதிகளைச் சொல்லலாமாயிருக்க, அந்த வழியில் ஸமாதானம் கூறுதே *த்விஷதந்நம் ந போக்தவ்யம் த்விஷந்தம் நைவ போஜயேத், பாண்டவாந் த்விஷஸே ராஜந்! மம ப்ராணா ஹி பாண்டவா:* என்று கண்ணபிரான் கூறியது ப்ரஸித்தம். இதனால் பாகவதர்கள் பகவானுக்கு உயிர்நிலையானவர்களென் பது விளங்கிற்று கத்தியை உடலில் ஏதேனுமோரவயவத்தில் இட்டு வெட்டினால் மருந்திட்டு ஆற்றலாம்; அந்தக் கத்தியை உயிர்நிலையிலேயிட்டு வெட்டினால் பின்னைப் பரிஹாரமுண்டோ ? ஆக, பகவான் பாகவதர்களை ப்ராணனுகக் கொண்டிருக்கை யாலே பகவதபசாரத்தைவிட பாகவதாபசாரமே மேம்பட்டதென்று தேறிற்று. ஆகவே பிராட்டி 'மஹத் துஷ்க்ருதம்' என்றது பரதலக்ஷ்மணர்களிடத்தே பட்ட வாசிகாபசாரத்தையே என்னப் பொருந்தும். ... ...

திருவல்லிக்கேணியில் ஸ்ரீமதுபயவே தேசூர் ஸ்வாமியென்றே ப்ரஸித்தராய் விளங்கும் மஹாஸ்வாமியின் திருவுருவப்படமிது நேற்று புரட்டாசி மாதத்தில் சதாபிஷேகம் கண்டருளினார் இந்த ஸ்வாமி. ஸ்ரீபார்த்தஸாரதி கைங்கரியத்தில் இடைவிடாமல் ஈடுபட்டிருக்குமிந்தஸ்வாமி 'வையம் மன்னி வீற்றிருக்கவேணு'மென்று ஸ்ரீவைஷ்ணவவுலகம் முழுதும் பாரிக்கின்றது.

—பத்ராதிபர்.

அருளிச்செயல் பகுதி ★

திவ்யப்ரபந்தத்தில் விலக்ஷணமான பரீக்ஷை

(சிறுபிள்ளைகள் இத்தகைய பரீக்ஷைகளில் தேறப் பழகவேணும்)

உபாத்யாயர் கண்ணனென்கிற மாணுக்கனை நோக்கிச் சொல்லுகிறார்—

"கண்ணு! இன்று நான் உன்னைப் பத்து பாட்டு கேட்க விரும்பி யிருந்தேன், சொல்லு" என்று

அன்பர்களே! இந்த வாக்கியத்தில் பத்து சொற்கள் இருக்கின்றன; இதில் பரீக்ஷை முடிந்துவிட்டது. இந்த வாக்கியத்திலுள்ள ஒவ்வொரு சொல்லையும் தொடக்கமாகக் கொண்ட பத்துப் பாசுரங்களைச் சொல்லவேணுமென்பது உபாத்யாயருடைய கருத்து. இதுதான் பரீக்ஷை. மாணுக்கன் மிகவும் ஸமர்த்தனுகையாலே கருத்தறிந்து உடனே விடை யிறுக்கத் தொடங்கிவிட்டான்.

1. கண்ணு! = * கண்ணுநான்முகனைப் படைத்தானே. (பெரியாழ்வார் 5-1-6.)
2. இன்று = * இன்றுவந்தித்தனையும். (நாச்சியார் 9-7.)
3. நான் = * நான்முகனை நாராயணன் படைத்தான். (4.திருவந்தாதி 1.)
4. உன்னை = * உன்னைச் சிந்தை செய்து செய்து. (திருவாய். 2-6-6.)
5. பத்து = * பத்துடையடியவர்க் கெளியவன். (திருவாய்-1, 3, 1.)
6. பாட்டு * பாட்டு முறையும் படுகதையும். (நான்முகன் திரு-76.)
7. கேட்க. * கேட்கயானுற்றதுண்டு. (திருக்குறு-4.)
8. விரும்பி. * விரும்பிநின்றேத்தமாட்டேன். (திருமாலை 17.)
9. இருந்தேன். * இருந்தேனிருவினைப்பாசம். (இராமானுச நூற்-32.)
10. சொல்லு. *சொல்லுவன் சொற்பொருள் (பெரிய திருமொழி 2-9-1.)

— இதேபோல் மற்றொரு பரீக்ஷை

நங்கைமீர்! உங்கள் மண்வீடு அடியோடு நன்றுயிலிலை; எங்களது மாடமாளிகை முழுதும் தந்தம் பொன் வெள்ளி வெண்கலம் இரும்பானது; ஆயிரம் மக்கள் உள்ளே யடங்க இடமுண்டு.

அன்பர்களே! இந்த வாக்யராசியில் 24 சொற்கள் உள்ளன; இதனுல் இரு பத்துநான்கு பாசுரங்கள் பரீக்ஷிக்கப்பட்டன வென்றபடி. மாணுக்கன் உடனே விடை யிறுக்கிறான்:—

1. நங்கைமீர்! * நங்கைமீர் நீரு மோர் பெண் பெற்று. (திருவாய். 4-2-9)
2. உங்கள். * உங்கள் புழைக்கடை; (திருப்பாவை 14)
3. மண். * மண்ணுய் நீரெரிகால் (பெரிய திரு. 1-9-6)
4. வீடு. * வீடுமின்முற்றவும் (திருவாய். 1-2-1.)
5. அடி. * அடியால் படிகடந்த முத்தோ. (பெரிய திருவ. 27)
6. ஓடு. * ஓடுவார் விழுவார். (பெரியாழ். 1-1-2)
7. நன்றுய். * நன்றுய் ஞானங்கடந்துபோய். (திருவாய். 8-8-6)
8. இல்லை. * இல்லையல்லல். திருவாய்மொழி (9-10-10)

9. **எங்கள்.** எங்கள் கண்முகப்பே. (திருவாய்மொழி 9-2-8)
10. **அது.** * அது நன்றிது தீதென்று. திருவந்தாதி
11. **மாடமாளிகை.** * மாடமாளிகை சூழ்திருமங்கை. (பெரிய திரு 5-8-10)
12. **முழுதும்:** * முழுதும் வெண்ணெயளைந்து. (பெருமாள் 7-8)
13. **தந்தம்.** * தந்தம் மக்களழுதுசென்ருல். (பெரியாழ். 2-2-3)
14. **பொன்.** * பொன்போல் மஞ்சனமாட்டி. (ஷே 3-1-2)
15. **வெள்ளி.** * வெள்ளியார் பிண்டியார் போதியார். (பெரிய திரு. 9-7-9)
16. **வெண்கலம்.** * வெண்கலப் பத்திரம். (பெரியாழ். 1-9 5)
17. **இரும்பு.** * இரும்பு அனன்றுண்ட. (திருக்குறுந்-5)
18. **ஆனது.** * ஆனது செம்மையறநெறி. (இராமாநுச நூ.)
19. **ஆயிரம்.** *ஆயிரந்தோள்பரப்பி. (பெரியாழ். 4-3-10)
20. **மக்கள்.** * மக்கள் பெறுதவம்போலும். (பெரிய திரு. 10-4-2)
21. **உள்ளே.** * உள்ளே யுருகிநைவேனை. (நாச்சியார் 13-8)
22. **அடங்க.** * அடங்கெழில் சம்பத்து. (திருவாய் 1-2-7)
23. **இடம்.** * இடம்வலமேழ்பூண்ட. (திருவந்தாதி)
34. **உண்டு.** * உண்டுகளித்தேற்கு. (திருவாய்—)

விண்ணப்பம். இத்தகைய பரீக்ஷைகளில் மயங்காமல் உடனே விடையிறுத்துத் தேறக்கூடியவர்கள்—(1) அடியேன் குமாரன் P. B. ரங்கநாதன், (2) அடியேன் தௌஹித்ரன் அக்காரக்கனி அனந்தாழ்வான் ஆகிய சிரஞ்சீவிகள் இருவர். இத்தகைய பரீக்ஷைகளில் தேறுவதற்கு தைரிய புள்ளவர்கள் நாளது 16—11—77 முதல் 25—11—77 வரை இங்கு நடைபெறும் நம்பிள்ளை மஹோத்ஸவத்தில் வந்திருந்து அருளிச் செயல் கைங்கரியம் செய்து, பரீக்ஷைபுங் கொடுத்து ஸன்மானம் பெறலாம்.

தாஸன், P. B. **அண்ணங்கராசாரியர்.**

ஸ்ரீ ராமாயணத்தில் பல அருமையான விஷயங்கள்

— ஸ்ரீ ராமாயணத்திலிருந்து அபூர்வரீதியில் பல விஷயங்களை யெடுத்து விளக்கிவர விருப்பம். அவற்றுள் இது முதல் விஷயம். —

ஸ்ரீராமாயணத்தில் பல நூற்றுக்கணக்கான ஆராய்ச்சிகள் செய்யவேண்டியிருக்கிறது. அவற்றுள் இஃதொரு ஆராய்ச்சி விலக்ஷணமானது. ஸ்ரீராமபிரான் யார்யாரைப் பரிஷ்வங்கம் (ஆலிங்கனம்) செய்துகொண்டது? யார்யார் ஸ்ரீராமபிரானைப் பரிஷ்வங்கம் செய்து கொண்டார்கள்? என்பதை விமர்சிப்பது ஒரு விநோதம். பெரும்பாலும் யாவருமறிந்த இரண்டு பரிஷ்வங்கங்களுண்டு. *ஏஷ ஸர்வஸ்வ பூதஸ் து பரிஷ்வங்கோ ஹநூமத:, மயா காலமிமம் ப்ராப்ய தத்தஸ் தஸ்ய மஹாத்மந:* என்கிறபடியே பெருமாள் திருவடிக்குக் கொடுத்த பரிஷ்வங்கமொன்று. *தம் த்ருஷ்ட்வா ஸுத்ருஹந்தாரம் மஹர்ஷீணும் ஸுகாவஹம், பபூவ ஹ்ருஷ்டா வைதேஹீ, பர்த்தாரம் பரிஷஸ்வஜே* என்கிறபடியே (கரதூஷணாதிவதத்தின்போது) பெருமாளுக்குப் பிராட்டி கொடுத்த பரிஷ்வங்கமொன்று. இவை யிரண்டும் ஸுப்ரஸித்தமாகையாலே

இவ்விரண்டையும் பலருமறிவர். ஆசார்யஹ்ருதயத்தில் *வித்யை தாயாகப்பெற்று* என்றுதொடங்கி'பரதஅக்ரூரமாருதிகளைப்பரிஷ்வங்கித்தமணிமிகுமார்பிலேகுருமாமணியாய் அணையும் வஸ்துவுக்கு மணிவல்லிப்பேச்சு வந்தேறியன்று' என்று தலைக்கட்டும் சூர்ணையில் மாருதி பரிஷ்வங்கத்திற்குமுன்பே பரதாழ்வானுடையவும் அக்ரூரருடையவும் பரிஷ்வங்கத்தை அருளிச்செய்திருக்கையாலே *தம் ஸமுத்தாப்ய காகுத்ஸ்த: சிரஸ்யாக்ஷிபதம் கதம். அங்கே பரதமாரோப்ய முதித: பரிஷஸ்வஜே* என்று இராமபிரான் பரதாழ்வானுக்கும், *ஸோப்யேநம் த்வஜவஜ்ராப்ஜக்ருத சிஹ்நேந பாணிநா, ஸம்ஸ்ப்ருச்ய ஆக்ருஷ்ய ச ப்ரீத்யா ஸஸ்வாட்டம் பரிஷஸ்வஜே* என்று கண்ணபிரான் திருவாய்ப்பாடிக்கு வந்த அக்ரூரருக்கும் அளித்த பரிஷ்வங்கத்தையும் சிலர் அறிந்திருப்பர்.

ஸ்ரீராமாயணத்தில் அயோத்யா—அரண்ய—கிஷ்கிந்தா—ஸுந்தர—யுத்த காண்டங்களில் காணும் பரிஷ்வங்கங்களைப் பெரும்பாலுமிங்குத் தெரிவிக்கிறோம்.

அயோத்யாகாண்டத்தில் பெருமாள் செய்தருளின பரிஷ்வங்கங்கள்

30—23. *தாம் பரிஷ்வஜ்ய பாஹுப்யாம் விஸம்ஜ்ஞாமிவ துஃகிதாம், உவாச வசநம் ராம: * [பிராட்டியைப் பெருமாள் தழுவியது]

34—20. * தம் பரிஷ்வஜ்ய பாஹுப்யாம் தாவுபௌ ராமலக்ஷ்மணௌ. * [தாசரதிகள் சக்ரவர்த்தியைத் தழுவியது]

50—4. *புஜாப்யாம் ஸாது வ்ருத்தாப்யாம் பீடயந் வாக்யமப்ரவீத். [குஹப் பெருமானைப் பெருமாள் தழுவியது]

100—3. *ஆக்ராய ராமஸ் தம் மூர்த்நி பரிஷ்வஜ்ய ச ராகவ:, அங்கே பரதமாரோப்ய...* [பரதாழ்வானைப் பெருமாள் தழுவுதல்]

102—47. * தாந் நராந் பாஷ்பபூர்ணாக்ஷாந் ஸமீக்ஷ்யாத ஸுது:க்கிதாந், பர்யஷ்வஜத தர்மஜ்ஞ: பித்ருவந் மாத்ருவச்ச ஸ: * [சித்திரகூடம் சென்ற பௌரஜனங்களைப் பெருமாள் தழுவியது)

102—48. *ஸ தத்ர காம்ச்சித் பரிஷஸ்வஜே நராந். ஷ

112—27. *ததேதி ச ப்ரதிஜ்ஞாய தம் பரிஷ்வஜ்ய ஸாதரம், ஸுத்ருக்நஞ்ச பரிஷ்வஜ்ய பரதஞ்சேதமப்ரவீத்*. [பரதஸுத்ருக்நர்களைப் பெருமாள் தழுவியது]

ஆரண்ய காண்டத்தில் பெருமாள் செய்தருளின பரிஷ்வங்கங்கள்

5—1. ஹத்வா து தம் பீமபலம் விராதம் ராக்ஷஸம் வநே, ததஸ் ஸீதாம் பரிஷ்வஜ்ய ஸமாச்வாஸ்ய ச வீர்யவாந்* [விராதவதத்திற்குப் பிறகு பெருமாள் பிராட்டியைத் தழுவியது]

67—22. * ச்ருத்வா ஜடாயுஷோ வாக்யம் ராம்ஸ் ஸௌமித்ரிணா ஸஹ, க்ருத்ரராஜம் பரிஷ்வஜ்ய பரித்யஜ்ய மஹத் தநு:. [பெரியவுடையர்களைப் பெருமாள் தழுவியது]

67—29. * நிக்ருத்தபக்ஷம் ருதிராவஸிக்தம் ஸ க்ருத்ரராஜம் பரிரப்ய ராம:. [இதுவுமது]

அயோத்யாகாண்டத்தில் பெருமாளுக்குக் கிடைத்த பரிஷ்வங்கங்கள்

3—34. *தம் த்ருஷ்ட்வா ப்ரணதம் பார்ச்வே க்ருதாஞ்ஜலிபுடம் நிருபः. க்ருஹ்யாஞ்ஜலௌ ஸமாக்ருஷ்ய ஸஸ்வஜே ப்ரியமாத்மஜம்*. [தசரத சக்ரவர்த்தி பெருமாளை யணைத்தது]

4—11. *ப்ரணமந்தம் ஸமுத்தாப்ய தம் பரிஷ்வஜ்ய பூமிபः, [இதுவும் சக்ரவர்த்தி பெருமாளை யணைத்ததைச் சொன்னது]

20—21. *பரிஷ்வக்தச் ச பாஹுப்யாம் உபாக்ராதச் ச மூர்த்தநி, [கௌஸல்யாதேவி பெருமாளைத் தழுவியது]

25-46. *ப்ரதக்ஷிணஞ்சைவ சகார ராகவம் புநःபுநச்சாபி நிபீட்ய ஸஸ்வஜே. [இதுவும் கௌஸல்யாதேவி தழுவியது]

30—22. *சுக்ரோஷ பதிமாயத்தா ப்ருஷமாலிங்க்ய ஸத்வரம்*. [பிராட்டி பெருமாளைத் தழுவியது]

ஆரண்யகாண்டத்தில் பெருமாளுக்குக் கிடைத்த பரிஷ்வங்கங்கள்

7—7. * ஸ நிரீக்ஷ்ய ததோ வீரம் ராமம் தர்மப்ருதாம் வரம், ஸமாச்லிஷ்ய ச பாஹுப்யாம் இதம் வசநமப்ரவீத்* (ஸுதீக்ஷ்ண முனிவர் பெருமாளைத் தழுவியது)

8—10. * தௌ ஸம்ஸ்ப்ருஷ்டௌ தௌ சரணுவுத்தாப்ய முநிபுங்கவः, காடமாச்லிஷ்ய ஸஸ்நேஹமிதம் வசநமப்ரவீத் * (ஸுதீக்ஷ்ணர் ஸ்ரீ ராமலக்ஷ்மணர்களைத் தழுவியது)

30—39. * தம் த்ருஷ்ட்வா ஸுத்ருஹந்தாரம் மஹர்ஷீணும் ஸுகாவஹம், பபூவ ஹ்ருஷ்டா வைதேஹீ பர்த்தாரம் பரிஷஸ்வஜே* (கரதுஷணுதிவதத்திற்குப் பிறகு பெருமாளைப் பிராட்டி தழுவியது.) ... ...

கிஷ்கிந்தாகாண்டத்தில் பெருமாள் செய்தருளின பரிஷ்வங்கம்

5-14—7-16—12-12—39-1—40-1 ஆகிய இந்த ஐந்து இடங்களிலும் பெருமாள் ஸுக்ரீவ மஹாராஜரைத் தழுவியதொன்றே சொல்லிற்று.

ஸுந்தரகாண்டத்தில், பரிஷ்வங்க ப்ரஸ்தாவமே கிடையாது

யுத்தகாண்டத்தில் பெருமாள் செய்தருளின பரிஷ்வங்கம்

1—15 *ஏஷ ஸர்வஸ்வபூதஸ் து பரிஷ்வங்கோ ஹநூமதः, மயா காலமிமம் ப்ராப்ய தத்தஸ் தஸ்ய மஹாத்மநः*. [பெருமாள் திருவடியைத் தழுவியது]

41—1 *அத தஸ்மிந் நிமித்தாநி த்ருஷ்ட்வா லக்ஷ்மணபூர்வஜः, ஸுக்ரீவம் ஸம்பரிஷ்வஜ்ய*. [பெருமாள் ஸுக்ரீவ மஹாராஜரைத் தழுவியது]

92—10 *உபவேச்ய ஸமுத்ஸங்கே பரிஷ்வஜ்யாவபீடிதம், ப்ராதரம் லக்ஷ்மணம்.....* [பெருமாள் இளையோனைத் தழுவியது]

92—19 *ஸ தம் ப்ராதரமாச்வாஸ்ய பரிஷ்வஜ்ய ச ராகவः. [இதுவுமது]

102—46 *ஏஹ்யேஹீத்யப்ரவீத் ராமः லக்ஷ்மணம் பரவீரஹா, ஸஸ்வஜே ஸ்நேஹகாடஞ்ச* [இதுவுமது]

115—6 *ரரகவ: பரமப்ரீத: ஸுக்ரீவம் பரிஷஸ்வஜே, பரிஷ்வஜ்ய ச ஸுக்ரீவம்.....* [பெருமாள் ஸுக்ரீவ மஹாராஜரைத் தழுவியது]

130—40 *தம் ஸமுத்தாப்ய காகுத்ஸ்த: சிரஸ்யாகூஷிபதம் கதம், அங்கே பரத மாரோப்ய முதித: பரிஷஸ்வஜே* [பெருமாள் பரதாழ்வானைத் தழுவியது]

யுத்தகாண்டத்தில்—பெருமாளுக்குக் கிடைத்த பரிஷ்வங்கம்

50—41 *தாவுத்தாப்ய மஹாவீர்யௌ கருடோ வாஸவோபமௌ, உபௌ தௌ ஸஸ்வஜே* [பெரிய திருவடி ராமலக்ஷ்மணர்களைத் தழுவியது]

50—55 *ஏவமுக்த்வா ததோ ராமம் ஸுபர்ணஸ்ஸுமஹாபல:, பரிஷ்வஜ்ய* (இதுவுமது)

172—12 *புத்ரம் தஸரதஸ் தத:.....பாஹுப்யாம் ஸம்பரிஷ்வஜ்ய* [ஸ்வர்க்கத்திலிருந்துவந்த தசரத சக்ரவர்த்தி பெருமாளைத் தழுவியது]

172—15 *த்வாம் து த்ருஷ்ட்வா குஹநிம் பரிஷ்வஜ்ய ஸலக்ஷ்மணம், அத்ய துக்காத் விமுக்தோஸ்மி...* [சக்ரவர்த்தி இளையோனையும் சேர்த்துத் தழுவியது]

உத்தரகாண்டம்

107—18 *அபிஷிக்தௌ ஸுதாவங்கே ப்ரதிஷ்டாப்ய புரே தத:, பரிஷ்வஜ்ய மஹாபாஹு: மூர்த்நியுபாக்ராய சாஸக்ருத்* [பெருமாள் குஹலவர்களைத் தழுவியது...]

யதீந்த்ரரும்-யதீந்த்ரப்ரவணரும்

நாளை ஐப்பசித் திருமூலத்தன்று விஜ்ஞாபித்து அநுஸந்திக்க.

மணவாள மாமுனிகளுக்கு யதிவரபுநரவதார பூதரென்னும் ப்ரஸித்தி தொன்று தொட்டு விளங்கி வருகின்றது. எம்பெருமானாரே மீண்டும் மணவாள மாமுனிகளாகத் திருவவதரித்தருளினரென்றபடி. இதற்குரிய உபபத்திகள் பலவுள. அவற்றை முன்னம் ச்லோக ரூபேண விஜ்ஞாபித்துப் பின்னை வியாக்கியானமிட்டு விளக்குகிறேன்.

(ச்லோ.) வ்யாக்க்யாநக்ரந்ததாநாத் பரிவதநகதாகந்தவைதேசிகத்வாத்,
நாநாசாஸ்த்ரார்த்தப்ருந்தப்ரசுரபணிதிபி: ப்ராஜ்ஞஹ்ருத்ரஞ்ஜகத்வாத்
பூர்வாசார்யோக்திராகாத் சடரிபுபு நிராட்ஸுக்திஸம்வர்த்தகத்வாத்
பீடாதீசப்ரதிஷ்டாபநக்ருதிகரணாத் திவ்யதேஸாபிமாநாத் ||

பணிராஜாவதாரத்வாத் ஸ்ரீரங்கஸ்ரீவிவர்த்தநாத்.
யதீந்த்ரப்ரவணஸ் ஸாக்ஷாத் யதீந்த்ரோ பாஷ்யகருத் த்ருவம்.

இதற்கு ஸங்க்ஷேபமான வியாக்கியானம் காண்மின்

1. வ்யாக்க்யாநக்ரந்த தாநாத். பெரும்பாலும் வியாக்கியானங்களருளிச் செய்வதிலேயே ஊக்கம் எம்பெருமானாருக்கும் மாமுனிகளுக்குமொக்கும்; ஸ்ரீபாஷ்யம், வேதாந்த தீபஸாரங்கள், கீதாபாஷ்யம் என்னுமிவை வியாக்கியான க்ரந்தங்களேயன்றே! மாமுனிகளின் வியாக்கியான க்ரந்தங்களும் ப்ரஸித்தங்கள். வேதார்த்த

ஸங்க்ரஹம், கத்யத்ரயம்—என்று சில மூலக்ரந்தங்களும் ஸ்வாமி ஸாதித்ததுபோலே மாமுனிக்ளும் யதிராஜ விம்சதி, உபதேச ரத்தினமாலை முதலிய மூலக்ரந்தங்களை மருளிச்செய்தது ப்ரஸித்தம்.

2. பரிவதநகதாகந்த வைதேசிகத்வாத். பரிவதநமாவது பரீவாதம்; நிந்தை யென்றபடி. அஸ்தாநே நிந்தாபரிஹாஸங்களை நிரப்பி நூல்களெழுதுவாரு முளரே; அங்ஙனம் நிந்தையையோ பரிஹாஸத்தையோ அணுவளவும் புகவிடாமல் பரமபவித்திர ஸ்ரீஸூக்திகளை யருளுந் தன்மை ஸ்வாமிக்கும் மாமுனிகளுக்குமே யொக்கும்.

3. நாநா ஸாஸ்த்ரார்த்த ப்ருந்தப்ரசுரபணிதிபி: ப்ராஜ்ஞஹ்ருத் ரஞ்ஜகத்வாத் தொட்ட தொட்ட விடமெங்கும் பலபல சாஸ்த்ரார்த்தத் திரள்களே மலிந்த ஸ்ரீஸூக்தி களினுலே பண்டிதர்களின் உள்ளத்தை உகப்பிக்குந் தன்மை ஸ்வாமிக்கும் மாமுனி களுக்குமே யொக்கும்.

4. பூர்வாசார்யோக்திராகாத். எம்பெருமானுர் ஸ்ரீபாஷ்யம் தொடங்கும்போதே "பகவத் போதாயந க்ருதாம் விஸ்தீர்ணும் ப்ரஹ்மஸூத்ரவ்ருத்திம் பூர்வாசார்யாஸ் ஸஞ்சிக்ஷிபு: தந்மதாநுஸாரேண ஸூத்ராக்ஷராணி வ்யாக்க்யாஸ்யந்தே" என்றரு ளிச்செய்து பூர்வாசார்ய ஸூக்திகளில் தமக்குள்ள அபிநிவேஶாதிஶயத்தை விளங்கக் காட்டியருளினுர். மாமுனிகளும் *முன்னோர் மொழிந்த முறை தப்பாமல் கேட்டு *முன்னவராம் நங்குரவர் மொழிகள் உள்ளப் பெற்றேம் முழுதும் நமக்கவை பொழுது போக்காகப் பெற்றேம் *இத்யாதிகளாலே தமக்குள்ள பூர்வாசார்ய ஸூக்தி பஹுமா னத்தைக் காட்டியருளினதோடு நில்லாமல், தம்முடைய வியாக்கியான க்ரந்தங்களைப் பூர்வாசார்ய ஸூக்திமயமாகவே அவதரிப்பித்தருளினுர்.

5. சடரிபுமுநிராட்ஸூக்தி ஸம்வர்த்தகத்வாத். ஸ்வாமியின் வாழி திருநாமத் திலே மாறனுரை செய்த தமிழ்மறை வளர்த்தோன் வாழியே என்று ஓதா நின்றேம். *ஆய்ந்த பெருஞ் சீரார் சடகோபன் செந்தமிழ் வேதந்தரிக்கும் பேராத வுள்ளம் பெற-ஏய்ந்த பெருங்கீர்த்தி யிராமானுச முனிவன் வாய்ந்த மலர்ப்பாதம் வணங்குகின்றேன்* என்று அக்காலத்து சிஷ்யவர்க்கங்கள் பணிக்கக் காணுநின்றேம். இதுபற்றி மாமுனி கள் திறத்திலே சொல்லவேணுமோ? *சேற்றுக் கமலவயல் சூழரங்கர் தம் சீர்தனழப் பப் போற்றித்தொழு நல்ல வந்தணர்வாழ விப்பூதலத்தே, மாற்றற்ற செம்பொன் மண வாளமாமுனி வந்திலனேல், ஆற்றில் கரைத்த புளியல்லவோ தமிழ்ஆரணமே' என்ற வொரு பாசுரம் போதுமே.

6. பீடாதீஶ்ப்ரதிஷ்டாபநக்ருதி கரணத். ஸ்வாமி எழுபத்து நான்கு ஸிம்ஹா ஸநாதிபதிகளை ஸ்தாபித்தருளி அவர்கள் வழியாக தர்சந நிர்வாஹம் செய்தருள்வது ஸுப்ரஸித்தம். *லக்ஷ்மீநாதாக்க்ய ஸிந்தௌ சடரிபுஜலத:* இத்யாதி ச்லோகத்ரத் னத்தினுலும் இது ஸுவ்யக்தம். மாமுனிகளும் "திரமாக திக்கஜங்களிட்டருளும் பெருமாள்" என்கிறபடியே அஷ்ட திக்கஜாசார்யர்களை ஸ்தாபித்தருளி அவர்கள் வழியாக தர்சந நிர்வாஹம் செய்தருள்வது நாடு நகரமும் நன்கறிந்தது.

7. திவ்யதேசாபிமாநாத். [இதற்கு இரண்டுவகையாகப் பொருள்] *மன்னிய தென்னரங்காபுரி மாமலை மற்று முவந்திடு நாள்* என்றும், ஸ்ரீரங்கம் கரிசைல மஞ்ஜந கிரிம் தார்க்ஷ்யாத்ரி ஸிம்ஹாசலௌ.....ஸ்ரீரங்கேஶஜயத்வஜோ விஜயதே ராமாநு

ஜோயம் முநி:* என்றும்சொல்லுகிறபடியே ஸ்வாமி ஸகலதிவ்யதேசங்களிலும் அபிமானம் காட்டியருளினவர். மாமுனிகளும் *அடைவுடனே திருப்பதிகள் நடந்த வேர்வையாறவோ* என்கிறபடியே திவ்யதேச யாத்திரைகள் செய்தருளி அவற்றில் அபிமானம் காட்டியருளினபடி ஸுப்ரஸித்தம். [அதவா] திவ்யதேசாபிமாநமாவது—திவ்யதேசச்ரேணியில் சேராதிருந்த ஸ்தலத்தை திவ்ய தேசமாக அபிமானித்தல். ஸ்வாமி திருநாராயணபுரத்திற்கு "ஒரு நாயகமாய்" என்கிற திருவாய்மொழியை ஸமர்ப்பித்து அத்தலத்தை திவ்யதேசமாக அபிமாநித்தருளினதும். மாமுனிகள் ராஜமன்னார் ஸன்னிதிக்கு *தீர்ப்பாரையாமினி:என்கிற திருவாய்மொழியை ஸமர்ப்பித்து அப்பதியை திவ்ய தேசமாக அபிமானித்தருளினதும் அநுஸந்தேயம். [*வண்துவராபதிமன்னனை".]

8. பணிராஜாவதாரத்வாத். ஸ்வாமி சேஷாவதாரமென்பது ஸுப்ரஸித்தம். கருடவாஹன பண்டிதர் பணித்த திவ்யஸூரி சரிதத்திலும், வடுகநம்பி பணித்த யதிராஜ வைபவத்திலும் மற்றும் பல பிரபந்தங்களிலும் இது விசதம். மாமுனிகள், வரவரமுநி சதகத்திலே *துக்தோதந்வத்தவளமதுரம் சுத்தஸத்வைகரூபம் ரூபம் யஸ்ய ஸ்புடயதிதராம் யம் பணீந்த்ராவதாரம்* என்றருளிச்செய்தபடியும் மற்றும் சரித்ர ப்ரஸித்தியின்படியும் திருவனந்தாழ்வான் திருவவதாரமென்பது ஸுவ்யக்தம்.

9. ஸ்ரீரங்க ஸ்ரீவிவர்த்தநாத். ஸ்வாமி *தென்னரங்கர் செல்வம் முற்றும் திருத்திவைத்தான்வாழியே" என்று எண்டிசையும் வாழ்த்துகிறபடியும் கோயிலொழுகு முதலானவற்றில் காண்கிற இதிஹாஸ விஸ்தாரப்படியும் ஸ்ரீரங்கஸ்ரீயை வளர்த்தருளினவர் என்பது விச்வவிதிதம். மாமுனிகள் திறத்து மிங்ஙனமேயன்றோ? "அரங்க நகர்வாழ இன்னுமொரு நூற்றாண்டிரும்" என்றன்றோ நிச்சலும் வாழ்த்துகின்றதுலகம்.

ஆக இத்தன்மைகளாலே, யதீந்த்ரப்ரவணஸ் ஸாக்ஷாத் யதீந்த்ரோ பாஷ்யக்ருத் த்ருவம். —யதீந்த்ரப்ரவணரென்று திருநாமம் பெற்ற மணவாளமாமுனிகள் ஸாக்ஷாத் எதிராசரே யென்னத் தட்டில்லையென்றதாயிற்று. இங்ஙனே நிர்வஹிக்கக் கூடிய உபபத்திகள் மற்றும் பலவுள. அவற்றை அடியேனுடைய பலநூல்களிற்கண்டு கொள்வது.

உயர்திரு. K. ரகுபதிராவ் அவர்களுக்கு விடை.

— "மனக்குற்றமாந்தர்பழிக்கில் புகழ்" —

சென்னைத் திருவல்லிக்கேணியில் நெடுநாளாக ஸ்தாபனம் பெற்றிருக்கிற *உடையவர் கைங்கரியஸபையின்மூலமாக ஸமீபகாலத்தில் வெளியிடப்பட்ட ஸ்ரீராமாநுஜ ஸஹஸ்ராப்தீமலர் 6-11-77 Sunday காலை திருவல்லிக்கேணி ஸ்ரீபார்த்தஸாரதி ஸபையில் அரங்கேற்றம் செய்யப்பட்டது. அப்போது, கனம் (தமிழ்நாடு) கவர்னர் அவர்களும், ஓய்வுபெற்ற சென்னை ஹைகோர்ட் ஜட்ஜ் ஸ். கிருஷ்ணஸ்வாமி ரெட்டியாரவர்களும், ஜஸ்டிஸ். G. ராமாநுஜம் அவர்களும் மற்றும் எண்ணிறந்த கனவான்களும் ப்ரஸன்னமாயிருந்தார்கள். நானும் அந்தப் பெருங்குழுவில் அந்வயித்திருந்தேன். ஸ்ரீராமாநுஜர் பெருமையைப் பற்றி மேலே குறிப்பிட்ட கனவான்களும் நானும் மற்றுஞ் சில வித்வான்களும் பேசநேர்ந்தது. முக்கியமாக ஸ்ரீராமாநுஜருடைய கருணை

யின் திறத்தைப்பற்றி ஷெகனவான்கள் பேசினர்கள். மேலேதலையங்கத்தில் குறிப்பிடப் பெற்ற ஸ்ரீமான் K. ரகுபதிராவ் அவர்கள் ஸ்ரீராமாநுஜருடைய பெருமையைப் பொருத வராய் நமக் கொரு கடிதம் ஆங்கிலத்தில் 7-11-77ல் வரைந்துள்ளார். அதன்ஸாரம்-

1. ஸ்ரீராமாநுஜர் கோபுரத்தின் மேலேறி, குருவின் ஆணையை மீறி மந்திரத்தை எல்லோருக்கும் வாரி இறைத்து விட்டதால் என்ன நன்மை செய்ததாயிற்று? பிறகு உலகோர்களெல்லாம் இம்மந்திரத்தை ஆதரித்தார்களா? இதனுல் அவர் குருவின் உபதேசத்தைப் பொருள் படுத்தவில்லை யென்றே தெரிகிறது.

2. பகவத்கீதையில் "தத் வித்தி.....என்று சொல்லிற்று. ஸ்ரீராமாநுஜர், தாம் தத்வதர்சனம் படைத்தவரன்றென்றும், தமது உபயோகத்திற்காக குரு அளித்ததை அவர் வீண் செய்து விட்டாரென்றும் இதனுல் தேறுகிறது. அதிகாரத்தில் இருப்பவர் ஆபீஸில் "அதிரஹஸ்யம்" என்று எழுதப்பட்டவை யெல்லாவற்றையும் மேடை மேலேறி எல்லோருக்கும் சொல்லிவிடலாமா?

3. இது இக்காலத்துக் கல்விமுறையை ஒத்திருக்கிறது. ஆசிரியர் தாம் சம்பளம்பெற, மாணவன் பள்ளிக்கு வந்தாலும் வராவிட்டாலும் அவர்களுக்கு ஆஜர் ஆனதாகக் குறிப்புபோடுவது மாதிரியுள்ளது இது யூனிவர்ஸிடியிலும் சிபார்சின் பலத் தால் பரீக்ஷையில் ஒன்றுமே எழுதாதவனையும் தேற்றி வைக்கிறார்கள். ஆனுல் இவை யெல்லாம் நல்ல முறை யென்று சொல்லலாமா?

4. உலகத்தோரெல்லாம் வாழவேண்டுமென்றே கதிரவன் ஒளி வீசுகின் றன் ஆனுல் கோட்டான், வௌவால் முதலிய ஜந்துக்கள் அவனை ஏன் வெறுக்கின்றன? ஸ்ரீ ராமாநுஜர் மந்த்ரத்தை இறைத்துவிட்டதால் நன்மை ஏற்பட்டுவிடுமாகில், பூமியில் எல்லோரும் தேறி நல்லவர்களாகவே இருந்திருக்கவேண்டாவோ? அப்படியில்லையே.

5. இப்படியாகாமைக்குக் காரணம் ஸ்ரீ ராமாநுஜர் முதலியோர் குருவின் ஆணையை திரஸ்கரிக்கும் வழியைக் காட்டிக்கொடுத்ததேயாகும். தற்காலத்துச் சிறிய வர்கள் பெரியோர்களை மதிப்பர்களென்று எதிர்பார்க்கமுடியுமோ? இக்காலத்தில் தப்பு வழிகளில் செல்பவர்க்கேமதிப்புகிடைத்துவருகிறது. இதனுல் நீதிநெறி கெட்டுவிட்டது.

6. தூரதர்சனமென்றுல் என்ன? பரீக்ஷையில்லாமலே மாணவர்களைத் தேறவைப்பதும் தூரதர்சனமாகுமா? ஆகுமென்றுல், School, காலேஜ், பரீக்ஷை, வேலை முதலியவை யொன்றும் தேவையில்லை யென்றும், எல்லோருக்கும் சம்பளம் மட்டும் தரப்படுமென்றும் கவர்னர் உத்தரவு செய்துவிடலாமே.

7. ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்தத்தில் பக்திக்கு இடமுண்டா? ஜீவர்கள் சுத்த ஸ்வபாவ முடையவரென்று சொன்னுல் அவர்களுக்கு அசுத்தி யுண்டாவதற்குக் காரணமென்ன?

8. ஸத்யத்தில் ஆதரவுள்ளவர்கள் பொய்யை யுபதேசிக்கலாகாது, தர்ம க்ரந்தங்களை இப்படி தீயவழியில்உபயோகப்படுத்தக் கடவுள் அநுமதி தந்திருக்கிறரா? சாஸ்திரங்கள் அவரவர்களின் உபயோகத்திற்காக ஏற்பட்டனவேயன்றி, மேடையில் ப்ரஸங்கிக்கவன்று. இல்லையேல் கவர்னரும் ரஹஸ்யமான ராஜகார்யச் செய்திகளை யெல்லாம் எல்லோருக்கும்-துஷ்டர்களுக்கும்-வெளியிட்டுவிடட்டுமே.

இப்படியெல்லாம்வரைந்தராவ்ஜீ அவர்களின் கருத்து என்னவென்றால், ஸ்ரீராமானுஜர் சாஸ்த்ரவரம்பைக்கடந்துஉபதேசம்செய்ததுதவறு, கொண்டாடதக்கதன்று–என்பதேயாம். இவர் சாஸ்த்ரஜ்ஞராயிருக்கக்கூடுமென நம்பி வேதத்திலிருந்து ஒரு பெரிய விஷயம் இங்கெடுத்துக் காட்டுகிறேன்—இதனால் இவர் எமாதான மடையலாம் பிராமாணிகராயிருந்தால்———தைத்திரீய ஸம்ஹிதையில் 3–வதுகாண்டம்முதல் ப்ரச்நத்தில் "மநுः புத்ரேப்யோ தாயம் வ்யபஜத் என்று தொடங்கும் ஓர் வாக்ய ராசியில் நாபாநேதிஷ்டனென்னும் மநு குமாரனுடைய உபாக்கியானமொன்று ஓதப்பட்டுள்ளது. அதனை இந்த ராவுஜீ அவர்கள் வைதிகர்களிடம் கேட்டிருந்தாராகில் ஸ்ரீராமானுஜரிடம் குறை கூற நெஞ்சாலும் நினைத்திருக்கமாட்டார். அந்த உபாக்கியானத்தை வேதபாஷ்யத்தில் காணும் விவரணப்படியே இங்கு விவரிக்கிறேம்.

[மநுः புத்ரேப्यः தாயம் வ்யபஜத்.] மநுமஹர்ஷியானவர் தம்முடைய புத்திரர்களுக்கு தாயவிபாகம் பண்ணினார்—பங்கு பிரித்துக்கொடுத்தாரென்றபடி. [ஸ நாபாநேதிஷ்டம் ப்ரஹ்மசர்யம் வஸந்தம் நிரபஜத்] அவருடைய புத்திரனான நாபாநேதிஷ்டனென்பவன் வேதார்த்தமோதுவதற்காக குருகுலவாஸம்பண்ணப்போயிருந்ததனால் அவனொருவனுக்குமட்டும் பங்கு பிரித்துக்கொடுக்கவில்லை. [நிரபஜத்–நிர்ப்பாகம் க்ருதவாந்] என்றபடி. இந்த ஸங்கதி தேசாந்தரவாஸியான நாபாநேதிஷ்டனுக்குத் தெரியவந்தது. [ஸ ஆகச்சத்] அவன் தகப்பனார் இருக்குமிடத்திற்கு வந்தான். [ஸோ ப்ரவீத் கதா மா நிரபாக் இதி.] 'நீர் எனக்கு ஏன் பங்கு வைக்கவில்லை' என்று தகப்பனாரைக் கேட்டான். [ந த்வா நிரபாக்ஷமித்யப்ரவீத்] தந்தையான மநுமஹர்ஷி மகனை நோக்கிச் சொன்னார்–பிள்ளாய்! உனக்கு நான் பங்கு வைக்காமற் போகவில்லை, வைத்தே யிருக்கிறேனென்றார். என்ன வைத்திருக்கிறீர்? எங்கே வைத்திருக்கிறீர்? சொல்லும் என்று கேட்டான் நாபாநேதிஷ்டன். அவனுக்குத் தந்தை கூறின விடையாவது—[அங்கிரஸ இமே ஸத்ரமாஸதே, தே ஸுவர்க்கம் லோகம் ந ப்ரஜாநந்தி தேப்ய இதம் ப்ராஹ்மணம் ப்ரூஹி] அதோ பார், அங்கிரஸ்ஸுக்கள் ஸ்வர்க்கப்ராப்திக்காக யாகம் செய்யத்தொடங்கியிருக்கிறார்கள்; ஸ்வர்க்க ப்ராபகமான மந்த்ர விசேஷத்தை அவர்கள் அறியார்கள். அந்த மந்த்ரத்தை நான் உனக்கு உபதேசிக்கிறேன்; இதை யறிந்துகொண்ட நீ அங்குச்சென்று இந்த மந்திரத்தை அவர்களுக்குச்சொல்லு; [தே ஸுவர்க்கம் லோகம் யந்தோ ய ஏஷாம் பசவஸ் தாந் தே தாஸ்யந்தீதி] உன்னிடம் மந்த்ரோபதேசம்பெற்ற அவர்கள் யாகத்தின் பயனைப் பெற்றவர்களாய், யஜ்ஞத்தில் மிச்சப்பட்டவஸ்துக்களனைத்தையெல்லாம் உனக்குக் கொடுப்பார்கள். (அவை விலையுயர்ந்தவஸ்துக்களாகையாலே உனக்குப் பர்யாப்தம் என்று சேஷபூரணம் செய்துகொள்க.) மேலே [ததேப்யோப்ரவீத் தே ஸுவர்க்கம் லோகம் யந்தோ ய ஏஷாம் பசவஸ் தாந் அஸ்மா அததுரித்யாதி] என்று ஓதிற்று. தந்தையிடம் மந்த்ர விசேஷத்தை உபதேசம் பெற்ற நாபாநேதிஷ்டன் அந்த யஜ்ஞபூமிக்குச் சென்று அவர்களுக்கு அந்த மந்த்ரவிசேஷத்தை உபதேசிக்க, அப்படியே யஜ்ஞசிஷ்டவஸ்துக்களனைத்தையும் எடுத்துக்கொண்டான் என்றும், பசுபதியான ருத்ரன் அங்கேவந்து தகைந்தானென்றும் மேலே கதை போகிறது. ஒருவிதமாக ஸந்தி செய்து கொண்டதனால் விவாதம் தணிந்து நாபாநேதிஷ்டன் பூர்ணகாமனாய் மீண்டனன் என்று முடிக்கப்பட்டிருக்கிறது.

இங்கு இரண்டு விஷயங்கள் விமர்சிக்கவேண்டும்; நாபாநேதிஷ்டன் மநு மஹர்ஷியைவணங்கி எனக்கு மந்த்ரோபதேஶம் பண்ணியருள வேணும்—என்று வேண்டிக் கொண்டானல்லன். யஜ்ஞபூமிக்குச் சென்று சேர்ந்த இவரே அங்கிருந்த அங்கிரஸ்ஸுக்களும் தங்களுக்கு மந்த்ரோபதேஶம் பண்ணுமாறு பிரார்த்தித்தார் களல்லர். அந்த மந்த்ரமோ ஸாமாந்யமானதன்று. *தத்விஜ்ஞாநார்த்தம் ஸ குரு மேவாபிகச்சேத்* என்றும்,* தத் வித்தி ப்ரணிபாதேந பரிப்ரச்நேந ஸேவயா* என்று முள்ள ஶாஸ்த்ரவிதி இவர்களுக்கு இல்லையோ?

ஸ்ரீராமாநுஜர் சாஸ்த்ரவிருத்தமாக ஒன்றும் செய்தருளவில்லை. திருக்கோட்டி யூர்க்குப் பதினெட்டுபர்யாயம் நடந்து வருந்திப்பெற்ற அர்த்தத்தைப் பலர்க்கு அளித்த தருளினர் என்கிற இதிஹாஸத்தைப் பலரும் உள்ளபடியறியாதே தவருகச் சொல்லி வருகிறார்கள். உண்மை இதோ விளக்கப்படுகிறது.

ஸ்ரீ ராமாநுஜர் திருக்கோட்டியூர்க்குப் பன்முறையும் எழுந்தருளினபோது பெருமாளை ஸேவிக்கக்கூட ஸன்னிதிக்குப் போகாமல் நம்பி திருமாளிகை வாசலி லேயே படுகாடுகிடப்பர்; அது கண்ட விலக்ஷணர்களான அவ்வூர் ஸ்வாமிகள் சிலர் ஸ்வாமியிடம் வந்து 'இங்கு என்ன விஶேஷத்திற்காக அடிக்கடி யெழுந் தருளுகிறபடி?' என்று வினவ, அதுகேட்ட ஸ்வாமி ராமாநுஜர் ''இங்கு நம்பிக ளிடம் விஶேஷார்த்தநிதி யுள்ளது, அது பெறுவதற்காக'' என்று ஸாதிக்க, அப்போது அந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் ஸ்வாமி ஸன்னிதியிலே '''இந்த மஹா நிதி கிடைப்பது தேவரீருக்கே இவ்வளவு அருமைப்படும்போது எங்களுக்குக் கிடைக்க ப்ரஸக்திலேஶமில்லை; ஒருகால் ஸ்வாமிக்குக் கிடைத்தால் அடியோங்களை உபேக்ஷித்தருளலாகாது' என்று பிரார்த்தித்து வைத்தார்கள். ஸ்வாமி பரமகாருணிக ராகையாலே அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி 'ததாஸ்து' என்றருளியிருந் தார். அந்தத் திருவாக்கைப் பிறகு நிறைவேற்றியருளினர். கோபுரத்தின் மீதேறி மந்த்ரார்த்தங்களை இறைத்து விட்டாரென்பது அத்புக்தி. *பத்ரேக்ஷிதோ வா வ்யர்த் தஸ் ஸ்யாத் யத்ருச்சாச்ருத ஏவ வா* என்பது ஸ்வாமிக்குத் தெரியாததன்று ஆசார்ய ஹ்ருதயத்தில் 'தாய்க்கும் மகனுக்கும் தம்பிக்கும் இவர்க்கும் இவரடிபணிந்தவர்க்குமே இவையுள்ளது' என்றவிடத்து வியாக்கியானத்தில் மணவாளமாமுனிகளால் திருக் கோட்டியூரில் ஸ்வாமி செய்தருளின உபதேஶக்ரமம் உள்ளபடி அருளிச்செய்யப்பட் டிருக்கின்றது காண்க. ஆஸ்திகர்களாய் ச்ரத்தாளுக்களானவர்களுக்கு உபதேசித் தருளினரேயல்லது வழிப்போக்கர்களுக்கு வாரியிறைக்கவில்லை. முன்னோர்களுக்கும் ஸ்வாமி ராமாநுஜர்க்கும் வாசி யென்னவென்றால் பலகால் துவளப்பண்ணுதே க்ருபா மாத்ரப்ரஸந்நாசார்யராய் உபதேசித்தருளினதே ஸ்வாமிக்குத் தன்னேற்றம். ஸ்வாமி யின் நியமன ப்ரகாரத்தை மணவாளமாமுனிகள் உபதேசரத்தினமாலையில்—*ஏரா ரெதிராசரின்னருளால், பாருலகில் ஆசையுடையோர்க்கெல்லாம் ஆரியர்காள்! கூறு மென்று * என்பதனால் விளங்கக் காட்டினர். ஸிதாபிராட்டி விழுகனை இராவ்ண னுக்கும், ப்ரஹ்லாதாழ்வான் தந்தையான இரணியனுக்கும், ஸ்ரீவிபீஷணாழ்வான் ஸஹோதரனை ராவணனுக்கும் அரியபெரிய உபதேஶங்களைச் செய்தது அவரவர் களின் ப்ரார்த்தனையைப்பெற்றே? பரமக்ருபையின் காரியத்தை உகக்கவேண்டியிருக்க துஷ்கர்த்தலைப்படுவது பொருமையினாலென்பதை மத்யஸ்தர்கள் அறிவர். பரமபக்த மணியான ப்ரஹ்லாதாழ்வானைப் பித்ருத்ரோஹி யென்றும், குருத்ரோஹியென்றும் துஷிப்பவர்களின் திரளில் இப்பெரியாரும் சேரட்டுமே. (தொடரும்)

— ஸ்ரீ : —

ஸ்ரீமதே ராமாநுஜாய நம :

ஸ்ரீமத் வரவரமுநயே நம :

உபந்யாஸக மஹாநிதி

(ஸ்ரீகாஞ்சீ, அண்ணங்கராசாரிய ரெழுதிய உபந்யாஸங்கள்.)

1. கைங்கர்ய ஸாம்ராஜ்யம்

முகவுரை : — ஸ்ரீராமாநுஜன் சென்றவிதழில் (352-ல்) உபந்யாஸக ஸௌபாக்ய மாக இதிஹாஸ புராணதிகளில் வினு விடைகள் தொடங்கியிருக்கிறேம். விடைகள் சுருக்கமாயிருப்பதால் சிலர்க்கு விளங்காமற் போகும். நன்கு விளங்குவதற்காக ஊடேயூடே உபந்யாஸ மாலிகளும் வெளியிட்டு வருவோம். உபந்யாஸக மஹா நிதி, உபந்யாஸக ஸர்வஸ்வம், உபந்யாஸக ஜீவாது, உபந்யாஸக கண்டாப ரணம்.....இங்ஙனே பல பெயர்களால் உபந்யாஸத் தொகுதிகள் வெளிவந்து கொண்டேயிருக்கும். அடுத்தது — உபந்யாஸக ஸர்வஸ்வம்.....

தொண்டரடிப்பொடியாழ்வார் திருமாலியில் * தவத்துளார் தம்மிலல்லேன் தனம் படைத்தாரிலல்லேன் * என்றெருரு பாசுரம்பாடியுள்ளார். * யான் ஒரு தவமும் இயற்றினேனல்லேன் * என்று முன்னம் கூறினது தகும். உடனே, தனமும் யான் சம்பாதிக்கவில்லை யென்று மிக்க மனக்குறையுடன் கூறுகின்றாரே! இது தகுமா? * கொள்ளென்று கிளர்ந்தெழுந்த பெருஞ்செல்வம் நெருப்பாக * என்று நம்மாழ் வாரருளிச் செய்கிறார். அர்த்தகாமங்களை வெறுத்துத் தள்ளி ஆழ்வார்கள் கோஷ்டி யிலே சேர்ந்தபின்பும் * தனம் படைத்தாரிலல்லேன் * என்று கூறினால் இவர்க்கு வைராக்யமில்லையென்றுதானே சொல்லவேணும் — என்று சிலர் சங்கிப்பதுண்டு. இதைப்பற்றித் தெளிவு பிறப்பிக்க வேண்டியது அவசியமாகிறது. தருமம் அர்த்தம் காமம் மோக்ஷம் என்று புருஷார்த்தங்கள் நான்காகச் சொல்லப்படுகின்றன சாஸ்த் ரங்களில். * மன்னுமறம் பொருளின்பம் வீடென்றுலகில் நன்னெறி மேம்பட்டன நான்கன்றே * என்பது பெரிய திருமடல். * சேமநல்வீடும் பொருளும் தருமமும் சீரிய நற்காமமுமென்றிவை நான்கென்பர் * என்பது இராமாநுச நூற்றந்தாதி. தர்மார்த்த காமமோக்ஷங்கள் நான்கும் புருஷார்த்தங்களே. தர்மம் மோக்ஷம் என்னுமிவ்விரண்டைப்பற்றி யார்க்கும் விசாரமிராது. அர்த்தம் காமம் என்னுமிவை புருஷார்த்தமென்றால் இதைப்பற்றியே விசாரம் பெரிதுமுண்டாகக்கூடும். ஒரு விசாரமும் வேண்டா. தருமத்தைச் சொன்னவுடனே அர்த்தம் சொல்லப்பட்டிருக் கின்றது. மோக்ஷத்திற்கு முந்துற காமம் சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் தர்மோபயோகியான அர்த்தம் [த்ரவ்யம்] உத்தேச்ய மென்றும், மோக்ஷோப யோகியான காமம் உத்தேச்யமென்றும் தேறும்

. காமத்தைப்பற்றிச் சுருக்கமாகச் சொல்லிவிட்டு, கைங்கர்யோபயோகியான அர்த்தத்தைப்பற்றிச் சிறிது விரிவாகச் சொல்ல விரும்புகிறேம். காமமாவது ஆசை. ஆசை த்யாஜ்யமெனினும் எல்லாவிதமான ஆசையும் த்யாஜ்யமாகாது. அப்ராப்த விஷயங்களில் ஆசையே த்யாஜ்யமாகும். ப்ராப்த விஷயங்களில் ஆசை பரமோத் தேச்யமாகும். ஸ்ரீ வைகுண்டகத்யத்தில் * கதாஹம் பகவந்தம் நாராயணம்..... இதி பகவத் பரிசர்யாயாம் ஆசாம் வர்த்தயித்வா * என்று ஸ்வாமி எம்பெருமானு ரருளிச் செய்கிறார். இவ்வாசையை க்ஷணந்தோறும் அபிவிருத்தி செய்துகொண்டே யிருக்கவேணும். இல்லையாகில் மோக்ஷம் ரஸிக்கமாட்டாது. பசியில்லாதவனுக்கு

போஜனம் ரஸியாதாப்போலே இவ்வாசையில்லாதவர்க்கு மோக்ஷம் ரஸிக்க மாட்டாதாகையாலே இதுதான் காமமெனப்பட்டு, புருஷார்த்தமெனவும் பட்டது.

இனி அர்த்தத்தைப் பற்றிப் பேசுகிறோம். அர்த்தமாவது தனம். தனத்தை தர்விநியோகப்படுத்தி அநர்த்தத்தை விலக்கிக் கொள்பவர்கள் பலருளர். பகவதாலயங்களை இடிக்கவும், பாகவதர்களை வதை செய்யவும் பொருளீட்டுவாரும் பொருள் செலவு செய்வாரும் பலருளர். அவ்வழிகளிலே உபயோகப்படுகிற பொருள் த்யாஜ்யமேயாகும் * **ஜிதபாஞ்சஜந்யமணிப்ரதிமாபி வைதிகயந்நிவ ரங்கபுரே, மணி மண்டபவப்ரகணந் விததே பகாலகவி : ப்ரணமேமஹி தாந்** * என்று பட்டரருளிச் செய்தபடி திருமங்கையாழ்வார் கையில் கிடைத்த அளவுகடந்த பொருள் பகவத் கைங்கர்யத்திற்கு விநியோகப்பட்டது. அப்படியே பாகவத ததீயாராதநாதிகளுக்கும் அபரிமிதமாக விநியோகப்பட்டது. * **நரபதிபரிக்ல்ப்தம் சுல்கமாதாதுகாம : *** என்றும் *வேண்டிய வேதங்களோதி விரைந்து கிழியறுத்தான் * என்றும் சொல்லுகிறபடியே பெரியாழ்வார் பாண்டிய ராஜஸதஸ்ஸில் பெற்ற அபரிமிதமான தனராசியைக்கொண்டு ஸ்ரீவில்லிபுத்தூரில் கோபுரப்ராகாராதி நிர்மாணம் செய்வித்தருளினதாக சரித்திரம் வாசிக்கிறோம்.

உபநிஷத்துக்களிலும், ஜ்ஞாநச்ருதி முதலானவர்கள் ரைக்வர்முதலான ஆசார்யர்களுக்கு அபரிமிதமாகப் பொருள் ஸமர்ப்பித்து ப்ரஹ்மவித்யைகளை அதிகரித்ததாக ஓதப்பட்டிருக்கிறது. * **ஆசார்யாய ப்ரியம் தநமாஹ்ருத்ய ப்ரஜாதந்தும் மா வ்யவச் சேத்ஸீ : *** என்று தைத்திரீயோபநிஷத்தும் ஓதுகிறது. ஆக, ஸத்விஷயங்களில் விநியோகப்படக்கூடியதான தனம் த்யாஜ்யமன்று என்றும் உபாதேயமே யென்றும் விளங்கிற்று. தொண்டரடிப்பொடியாழ்வார், தமக்கு முன்னே தோன்றினவராய் தம்மைப்போலே புஷ்பகைங்கர்யத்திலே ஈடுபட்டிருந்தவரான பெரியாழ்வார் கிழியறுத்துக் கொணர்ந்த தனராசிகளைக் கொண்டு செய்த தொண்டுகளை நன்றாக அறிந்தவர். திருமங்கையாழ்வார் இவர்க்குப் பிற்பட்டவராலும் அவருடைய சரித்திரங்களையும் இவர் ஒருவாறு கேள்விப்பட்டிருக்கக்கூடும். அவருடைய தொண்டுகளையும் அறிந்திருக்கக்கூடும். அவ்விதமான தொண்டுகள் செய்வதற்கும் தனம் இன்றியமையாததாதலால் அக்கைங்கர்ய ருசியாலே * **தனம் படைத்தாரில்லேனை** * என்று குறையுற்றுச் சொல்லிக்கொண்டதில் தகுதியின்மை யொன்றுமில்லை. இந்த ப்ரஸங்கத்தில் மற்றொரு விசாரமும் செய்ய ப்ராப்தமாகிறது.

கைங்கரியம் செய்வதற்குப் பலவகைகரணங்கள் உண்டு. மநஸா செய்வது மாநஸிக கைங்கரியமாகும். வாக்கினால் செய்வது [அதாவது ஸ்துதிகளைச் சொல்லியேத்துவது] வாசிக கைங்கரியமாகும் சரீரத்தை ச்ரமப்படுத்திச் செய்யுமது காயிக கைங்கர்யமாகும். பொருள்களைச் செலவழித்துச் செய்யுமது ஆர்த்திக கைங்கர்யமாகும். மாநஸிக வாசிககைங்கர்யங்களை விட்டிட்டு, காயிக ஆர்த்திக கைங்கரியங்களைப் பற்றிச் சிறிது விசாரணை செய்வோம். நாம் சரீரத்தினால் செய்யும் கைங்கரியங்களினால் எம்பெருமானுக்குத் திருவுள்ளம் உகக்குமா? தனத்தினால் செய்யும் கைங்கரியங்களினால் திருவுள்ளம் உகக்குமா? என்று ஆராய்வோமாகில், தனத்தினால் செய்யும் கைங்கர்யங்களினால் அவன் திருவுள்ளம் உகவாது; தேஹத்தை ச்ரமப்படுத்திச் செய்யும் கைங்கர்யங்களினால்தான் திருவுள்ளம் மிகவுகக்கும் என்று ஸித்தாந்தம் செய்ய முடியும். எதனாலென்னில், கேண்மின். நமக்கு சரீரத்தில் அதிக ச்ரத்தையா? தனத்தில் அதிகச்ரத்தையா? என்று பார்ப்போம். குற்றம் செய்தவர்களுக்கு ராஜதண்டனை விதிக்கப்படுகிறது. * ஆயிரம் ரூபாய் அபராதம்; அது செலுத்தத் தவறினால் ஒருமாதம் கடினக்காவல் * என்று தண்டனை விதிக்கப்படுவதாக வைத்துக்கொள்வோம். இப்படி விதிக்கும்போது பரமதரித்ரரான யாரோ

சிலர் சிறையிருக்க முன்வருகிறார்களேதவிர, சிறிது துட்டு காசு உள்ளவர்கள் பணத்தை அவலீலையாகச் செலுத்திவிட்டு [வீசியெறிந்துவிட்டு] தேஹத்தைக் காப்பாற்றிக் கொள்ளப் பார்க்கிறார்கள். செய்த குற்றத்திற்கு *ஒருவாரம் கடினக் காவல்* என்று சிக்ஷை விதிக்கப்பட்டால் அதை மாற்றிக்கொள்ளப் பதினையிரம் ரூபாயும் செலவு செய்யத் துணிகிறார்கள். இவற்றால் நாம் என்ன அறிகிறோம்? ஜனங்கள் த்ரவ்யத்திற் காட்டிலும் தேஹத்தில் அளவுகடந்த ப்ரீதி வைத்திருக்கிறார்கள் என்பதை ஸ்பஷ்டமாகக் காண்கிறோம். அப்படி ப்ரேமத்துடன் காக்கப்படுகிற தேஹத்தை ச்ரமப்படுத்திச் செய்யும் கைங்கர்யமே யல்லவா உண்மையில் எம்பெருமானுக்கு அந்தரங்கத்தில் உகப்பை விளைவிக்கும்.

திருவாய்மொழியில் *சாமாறும் கெடுமாறும்*(4-9-2) என்கிற பாட்டின் ஈடுமுப்பத்தாறாயிரப்படி வியாக்யானத்தில் ஆச்சரியமான கதையொன்று எழுதப் பட்டிருக்கின்றது; அதாவது — ஒருவன் ராஜத்ரோஹக் குற்றத்திற்காகத் தண்டனையடைந்தானும்; என்ன தண்டனையென்னில், கையையும் காலையும் தறித்து விட்டார்களாம்; இரண்டொரு நாளில் உயிர் போகப்போகிறது. ஒரு ஆப்தர் அவனை விசாரிக்கச் சென்று *ஐயோ இப்படியாயிற்றே!* என்று வருந்தினராம். அதற்கு அவன் சொன்ன வார்த்தை; — *ஆயிரம்தா, ஐந்நூறு தா என்னுதே இவ்வளவோடே போயிற்றே. உங்கள் ஆசீர்வாத பலமன்றே இது* என்றனும். ஆயிரம் ரூபாயோ ஐந்நூறு ரூபாயோ அபராதம் செலுத்தும்படி ச்ரமப்படுத்தாமல் கையையும் காலையும் வெட்டினதற்கு இவன் பரமஸந்தோஷமடைந்ததாக இக்கதையினால் ஏற்படுகிறது. இப்படிப்பட்ட க்ருபணர்கள் சரீரத்திலே ச்ரத்தை கொள்ளாமல் தனத்திலே ச்ரத்தை கொண்டிருப்பார்களாகில் அன்னவர்கள் தனத்தினால் கைங்கரியம் செய்தே எம்பெருமானையுகப்பிக்கக் கடமைப் பட்டவர்களாவர். இப்படிப்பட்ட அதிகாரிகள் மிகச் சிலரே தேறுவர்கள். பெரும் பாலும் தனத்தை அவலீலையாகச் செலவுசெய்து தேஹத்தை நிழலிலே வைத்துக் காப்பாற்றுபவர்களாகவே தேறுவர்கள். அப்படிப்பட்டவர்கள் காயிககைங்கரியம் செய்தால்தான் எம்பெருமான் திருவுள்ளமுகக்கும். தொண்டரடிப்பொடியாழ்வார் தம்முடைய திருமேனியை ச்ரமப்படுத்திக் கைங்கரியம்செய்தவர் என்பது இவருடைய சரிதையில் ப்ரஸித்தமானது. அப்படியிருக்க இவர் *தனம் படைத்தாரிலல்லேன்* என்று குறைப்பட வேண்டாவே யென்று சங்கிக்க நேரும்.

இதற்குச் சொல்லுகிறோம்; தேஹ ச்ரமத்தினால் கைங்கரியம் செய்வதானது அக்காலத்தளவிலே நிற்குமத்தனை. தோட்டம் சமைத்துப் பூஞ்செடிகளை வளர்ப்பதோ, பகவத் ஸந்நிதிகளில் திருவிளக்கெரிக்கை, சாமரம் பணிமாறுகை, ஸ்ரீபாதம் தாங்குகை முதலான கைங்கரியங்கள் செய்வதோ இவையெல்லாம் அக்காலத்தோடு ஸமாப்தம். அபரிமிதமான பொருட் செலவு செய்து பண்ணப் படுகிற கைங்கரியங்களானவை திவ்யாபரண பீதாம்பர வாஹந ஸ்வர்ணரஜத பாத்ராதி ரூபேணவும் கோபுரப்ராகாரமண்டப தர்மசாலாதி ரூபேணவும் நீடூழி காலம் நிலைநின்று விளங்குமன்றே.

சென்ற நூற்றாண்டில் **வேங்கடாத்ரி** யென்றொரு பாகவதோத்தமர் இருந்தார். இற்றைக்கும் இவருடைய திருநாமத்தைக் கேள்விப்படாதாரில்லை. இவர் மஹாத்மாவென்று உலகங்கொண்டாட நிற்பவர். பரமவிரக்தரென்று புகழ் பெற்றவர். இவருடைய கைங்கரியமான ரத்னகிரீடங்கள் மற்றும் சில திவ்யாபரணங்கள் கோயில் திருமலை பெருமாள் கோயில் முதலான திவ்யதேசங்களிலே நாளைக்கும் பக்தஜந நயநாஹ்லாதகங்களாய் விளங்குகின்றன. *தேவப்பெருமாள் இன்று வேங்கடாத்ரி கொண்டை சாத்திக் கொள்ளுகிறார்* என்றால் பக்த

ஜனங்களின் குதூஹலம் வாசாமகோசரம். இக்கைங்கரியங்களுக்காக இம் மஹாத்மா பொருளீட்டினபோது * பத்து ரூபாய்க்குக் குறைவாக என்றைக்குக் கிடைக்கிறதோ, அன்றைக்கு சுத்தோபவாஸமிருந்து விடுவ * தென்று விரதம் கொண்டிருந்தாராம். அவ்வாருகத் தனம்படைத்து அவர்செய்த கைங்கரியம் கல்பாந்தமாக விளங்கியன்ரே பக்தர்களை மகிழ்விக்கக் கூடியதாக வுள்ளது.

* என்னுவிலின் கவி யாளெருவர்க்கும் கொடுக்கிலேன் * * வாய்கொண்டு மானிடம் பாடவந்த கவியேனல்லேன் * என்று நம்மாழ்வார் கொண்டிருந்த விரதம் திருமங்கையாழ்வார்க்குமுண்டு. ஆனால் அவ்வாழ்வார் தம்முடைய பெரிய திருமொழியில் பல பதிகங்களில் மானிடர்களைக் கொண்டாடிப்பாடுகிறார். எந்த மானிடர்களைப் பாடுகிறரென்னில்; விசேஷமான பொருட்செலவு செய்து திவ்ய தேசங்களில் சாச்வத கைங்கர்யங்களைச் செய்த மஹாநுபாவர்களையே பாடியிருக்கி ரூர். * மன்னுதண்பொழிலும் வாவியும் மதிளும் மாடமாளிகையும் மண்டபமும், தென்னன் தொண்டையர்கோன் செய்த நன்மையிலைத் திருவல்லிக்கேணி* என்றும், *மன்ன வன் தொண்டையர் கோன் வணங்கும் நீண்முடிமாலை வயிரமேகன் தன்வலி தன் புகழ் சூழ்ந்த கச்சியட்டபுயகரத்து * என்றும், * பல்லவன் வில்லவனென்றுலகிற் பலராய்ப் பல வேந்தர்வணங்கு கழற் பல்லவன் மல்லையர்கோன்பணிந்த பரமேச்சுர விண்ணகரம் * என்றும், * இருக்கிலங்கு திருமொழிவா யெண்டோளீசற்கு எழில் மாட மெழுபது செய்துலகமாண்ட திருக்குலத்து வளச்சோழன்சேர்ந்த கோயில் திருநறையூர் மணிமாடம் * என்றும் அருளிச்செய்துள்ள பாசுரங்கள் காண்க.

தனத்திற்கு இரண்டுவகையான உபயோகமேயுள்ளது. தானும் தமர்களு மாக வயிருரவுண்டு பல்வகைப்பட்ட போகங்களையுமநுபவிப்பது ஒன்று. ஸத்பாத்ர பூத பகவத் பாகவத விஷயங்களிலே விநியோகிப்பது மற்ரென்று. தாங்கள் வயிருர வுண்பதற்குப் பர்யாப்தமான பொருள் இல்லாதவர்கள் பகவத் பாகவத விஷயங்க ளிலே கிஞ்சித்கரிக்க ப்ரஸக்தியில்லை. புஷ்கலமான செல்வம் படைத்தவர்கள் கீழே சொன்ன இருவகை யுபயோகங்களையும் நடத்தி வருவார் இக்காலத்திலும் இல்லா மற் போகவில்லை; ஆங்காங்கு விரளமாகவுள்ளார்கள். தாமும் தமர்களுமாக வயிருர வுண்டு பலவகைப்பட்ட போகங்களையு மநுபவித்து ஸத்பாத்ர விநியோகத்தில் கண்செலுத்தாதேயிருப்பார் பலருளர். அவர்களைப்பற்றியும் நமக்கு விசாரமில்லை. தாமுமுண்ணுதே தமர்களுக்குமிடாதே ஸத்பாத்ர விநியோகத்தைக் கனவிலும் நினையாதே, வட்டிக்கு வட்டி வசூலித்துத் தனரக்ஷக நிதிகளில் பல லக்ஷக்கணக் கிலே பணத்தைச் சேமித்து வைத்து இதுவே ஆனந்தமாகவிருப்பார் எங்கும் நிறைந்துள்ளார்கள். இவர்கள் 'நளிகர்' என்கிற பெயரொன்றுக்கே ஆசைப்படு வார்கள்.

* நாம் பிறக்கும்போது கையிலே ஒருகாசு கொண்டு வந்திலோம்; இறக் கும்போது அரைநாணையும் அறுத்துக் கொண்டு நம்மைப் போகவிடுகிறார்கள். ஏதோ இடையில் சில தாண்டவங்கள் நடக்கின்றன. எம்பெருமான் நம்மைக் கூடியமட்டிலும் நல்ல ஸ்திதியில் வைத்திருக்கிறன்; நாமும் நமரும் உண்டு மிகுந்ததை யதாசக்தி ஸத்பாத்ரங்களிலே விநியோகித்துக் களிப்போம் * என்று நினைப்பவர்கள் மிகச்சிலரே. செல்வமில்லாதவர்களுக்கு இப்படிப்பட்ட குதூஹலங் கள் மிகுகின்றன. செல்வமுள்ளவர்களுக்கு கைங்கர்ய ருசி மேட்டுமடையா யிருக்கிறது.

2. பாண்டித்யமும் பரமபக்தியும்

உலகில் காணும் மஹான்களை நாம் இரண்டு வகுப்பில் சேர்த்துப் பேசுகின்றோம். சிலரை மஹாஜ்ஞானிகள் [மஹாபண்டிதர்கள்] என்று வழங்குகிறோம். சிலரை மஹாபக்தர்களென்று புகழ்கிறோம். பாண்டித்யமும் பரமபக்தியும் ஒரே நபரிடத்தில் ஒன்று சேர்ந்திருக்க முடியாத தன்மைகளல்ல. இருளும் ஒளியும் ஒன்று சேர்ந்திருக்கமாட்டாதவையென்பதுபோலே இந்த ஜ்ஞான பக்திகளும் ஒன்று சேர்ந்திருக்கமாட்டாதவை யென்பாரில்லை. நம்முடைய பூர்வாசாரியர்களும் மற்றும் பல பெரியார்களும் ஜ்ஞானபக்தி விரக்தி நிதிகளாயிருந்தவர்களே. ஆனால் இக்காலத்தில் இவற்றை நாம் ஏகாச்ரயத்தில் காண்பது அரிதேயாகின்றது. ஞானமுள்ளவிடத்தில் பக்தியையும் பக்தியுள்ளவிடத்தில் ஞானத்தையும் பெரும்பாலும் காணமுடிகிறதில்லை.

உலகில் ஜ்ஞாதாக்களுக்கு கௌரவம் அதிகமா? பக்திமான்களுக்கு கௌரவம் அதிகமா? என்று நாம் பார்த்தால், உண்மையில் பக்திமான்களுக்குத்தான் கௌரவம் அதிகமாக இருக்கவேண்டும்; ஆனால் ஜ்ஞாதாக்களுக்கே அதிகமான கௌரவம் ஆங்காங்குச் செய்யக் காண்கிறோம். இதற்குக் காரணமென்னவென்றால், இவர்கள் போலிபக்தர்களா? உண்மையான பக்தர்களா? என்று யதார்த்தமாகக் கண்டுபிடிக்க முடிகிறதில்லை. வித்வான்களென்கிற வகுப்பிலும் உண்மை வித்வான்கள் போலிவித்வான்களென்கிற வேற்றுமையிருந்தாலும் வாயிலிருந்து வெளிவரும் பேச்சுக்களைக்கொண்டு இன்னார் உண்மைப்பண்டிதர், இன்னார் போலிப்பண்டிதர் என்று தெரிந்துகொள்ள முடிகிறது பக்திமான்களை இங்ஙனே தெரிந்துகொள்வது முடியாத காரியமாக இருக்கின்றது.

பக்தனென்று வெளிக்குக் காட்டிக்கொள்ளக்கூடிய வேஷபூஷணங்களைத் தரித்துக் கொள்வது அனைவர்க்கு மெளிதாகின்றது. உள்கனிந்த உண்மையான பக்தி பிறப்பது மிகவும் அரிதாயிருக்கின்றது. பன்னிரண்டு திருமண்காப்புகளை அழகாயும் ப்ரகாசமாயும் தரித்துத் திருமணித் தாவடம் திருப்பவித்திரம் முதலியன பூண்டு கொண்டு பாகவதோத்தமனென்று உலகமடங்கலும் உகந்துகொள்ளும்படியான வேஷத்தோடு வெளிவருவதில் விசேஷமான ச்ரமமில்லை. இதுபோலவே முடிமுதல் அடிவரையில் திருநீறுபூசி ருத்ராக்ஷமாலையணிந்து சிவபக்தசிகாமணியாக விளங்குவதிலும் தாமதமேற்படாது. ஆனால் மனத்தில் அழுந்திக்கிடக்கும் பாபவாஸனைகளை அகற்றிப் பரமேச்வரனிடத்தில் உண்மையான அன்புகொண்டு தன்மயபாவத்தையடைவதொன்றே. மிகமிகக் கஷ்டஸாத்யமும் காலவிளம்பத்தில் அருமையாய்ப் பெறக்கூடியதுமாம்.

பக்தியின் வெளிவேஷங்களை வஹித்துக் கொள்வதனால் மாத்திரம் ஒருவன் உண்மையான பக்தனாக ஆய்விடமாட்டான். அநாதிகால ஸஞ்சிதமான பாபங்கள் கழிந்து துர்வாஸனைகள் தொலைந்து பரமபுருஷ விஷயத்தில் பரவசமான பக்தி ஏற்பட்டுத் தன்மயமாய்ப் போனால்தான் பக்தனாக முடியுமென்பதை ஒவ்வொருவரும் மனத்தில் அழுத்தவேண்டும். பக்தியின் வெளிச்சின்னங்கள் அவசியமில்லையென்று நாம் சொல்லுகின்றிலோம். அவை மிகவும் அவசியமே யென்பதைப் பற்றிச் சில வியாஸங்களை விரிவாக எழுதி வெளியிட்டுமிருக்கின்றோம். அந்த வெளிச்சின்னங்களைத் தரித்துக் கொள்வதனால் மாத்திரம் த்ருப்தியடைந்துவிடாமல் உண்மையான பக்திக்கு முயற்சி செய்யவேண்டும்.

பெருப் பெருத்த தருமகாரியங்களைச் செய்கிறவனே பக்தன் என்று சிலர் நினைக்கக்கூடும். குளம் வெட்டுவிப்பது, சத்திரம் சாவடிகள் கட்டுவிப்பது, தண்ணீர்ப்பந்தல் வைப்பது இவைபோன்ற பல வெளிப்பகட்டான காரியங்கள் செய்கிறவன் பக்தன் எனச் சிலர் நினைக்கிறார்கள். உண்மையுரைக்குங்கால் இக்காரியங்கள் ஒருவிதத்திற் சிறந்தவைகளேயாகிலும் இவ்வகைக் காரியங்கள் செய்வதனாலேயே ஒருவன் பக்தனென்னும் வ்யபதேசத்திற்குப் பூர்ணபாத்திரமாய் விடமாட்டான். இவ்விதமான பெருங்காரியங்கள் செய்ய அனைவர்க்கும் இயலாது. யாரோ சிலர்தான் இவற்றைச் செய்யக்கூடும். அங்ஙனம் செய்பவர்களோ விசேஷ தனிகர்களென்றும் விசாலமனம் படைத்தவர்களென்றும் சொல்லலாமேயல்லது பக்தர்களென்று சொல்லுவதற்கில்லை.

ஆனால் உண்மையான பக்தனுடைய அடையாளமென்னவென்று கேள்வி பிறக்கலாம். உண்மையான பக்தனைக் காண்பது அரிதேயாகிலும் கண்டுபிடிப்பது கஷ்டமல்ல. எம்பெருமான் பக்கலில் சுயநன்மை கருதாத அன்புடைய பக்தனிடத்தில் ஒவ்வொரு ஸமயத்திலும் நாம் விசேஷத்தைக் காணலாம். எந்த காலத்திலும் எந்த தேசத்திலும் எந்த நிலைமையிலும் பக்தன் பக்தனாகவேயிருப்பான். நீராடுவது உண்பது முதலிய காரியங்களைச் செய்யும்போதும். பந்துமித்திரர்களோடு பழகும்போதும், பிணியால் வருந்தும்போதும், பலவகைக் கஷ்ட நஷ்டங்கள் ஏற்படும்போதும், விசேஷமான லாபங்கள் கிடைக்கும்போதும் பக்தன் பக்தனாகவேயிருப்பான்; எல்லாக் காலதேசநிலைமைகளிலும் ஸாதாரணமான நிலைமை மாறுமலே அவனிருப்பான். எவ்விதமான கொந்தளிப்பும் அவனிடத்திற் காணமுடியாது. எப்பொழுதும் இயற்கையான ஸந்தோஷத்தோடு சாந்தமூர்த்தியாக இருப்பான். எவ்விதமான மாறுபாடும் அவனிடத்திற் காணமுடியாது. மஹத்தான ஆபத்துக்களிலும் தன்னிலைமையிலிருந்து பிறழமாட்டான். பொறுமையும் தயையும் சாந்தியும் பரிசுத்தியும் இன்னும் இது போன்ற பல நற்குணங்களும் அவனிடத்திற் பதிந்துகிடக்கும். பக்தியின் நிலைமை முதிரமுதிர இக்குணங்கள் வளர்ந்துகொண்டே வரும்.

எவன் தனது கடமைகளைக் குறையறச் செய்கிறானே, மஹத்தான ஆபத்துக்கள் மிடைந்தபோதும் அக்கடமைகளைச் செய்வதில் மயிரிழையும் பிசகுகிறானில்லையோ, தான் பிறர் சுற்றத்தார் மற்றையோர் மித்திரன் சத்துரு என்கிற பேதபாவனையின்றி அனைவரிடத்தும் ஒருபடியாக நடந்து கொள்ளுகிறானே, உள்ளும் புறமுமொத்த சுத்தனைய் நேரான நெறியில் நிலைநிற்கிறானே, எம்பெருமானிடத்தில் அகங்குழைந்த அன்புடையவனே அவனே உண்மையான பக்தனாவான். பாலையும் நீரையும் பகுத்திடும் அன்னம்போல் அத்தகைய பக்தர்களை அநாயாஸமாகக் கண்டறிவர் பெரியோர்.

ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் மூன்றுவது அம்சத்தில் ஏழாமத்யாயத்தில் யமகிங்கரஸம்வாதம் மஹாபக்தர்களின் லக்ஷணத்தை யமன் தனது கிங்கரர்களுக்கு மிக விரிவாகக் கூறுவதாய் நிபந்திக்கப்பட்டிருக்கின்றது. அங்குள்ள பல ச்லோகங்களுள் ஸாரமான ஒரு ச்லோகம் மாத்திரமே ஈண்டெடுத்துக்காட்டப்படுகின்றது; * ந சலதி நிஜவர்ணதர்மதோ யஸ் ஸமமதிராத்ம ஸுஹ்ருத் விபக்ஷபக்ஷே, ந ஹரதி ந ச ஹந்தி கிஞ்சிதுச்சைஸ் ஸிதமநஸம் தமவேஹி விஷ்ணுபக்தம் * என்பது கண்ட பாடம் செய்யத் தக்க ச்லோகரத்னம். இதன் பொருள்தான் இது காறும் விவரித்தது. ... ... *

3. ஆசாரியர்களுக்கு மேகஸாம்யம்

[* குணந்திகழ் கொண்டலிராமாநுசன் *]

[பத்து ப்ரகாரங்களாலே இவ்வொப்புமை நிர்வஹிக்கப்படுகின்றது.]

1 மேகமானது உப்புக்கடலிலுள்ள க்ஷாரமான ஜலத்தையும் தான் முகந்து மிக மதுரமாக்கிப் பெய்கின்றது. அதுபோல ஆசாரியர், நால்வேதக் கடலிலுள்ளனவாய் மந்தமதிகளுக்கு துரவகாஹங்களாய் அபோக்யங்களான அர்த்தங்களைத் தங்களுடைய திருநாவீறு கொண்டு பரமபோக்யமாக்கி உபகரிப்பர்.

2. மேகமானது * உயிரளிப்பான் மாகங்களெல்லாம் திரிந்து * (திருவிருத்தம்) என்றருளிச் செய்தபடியே லோகரக்ஷணார்த்தமாகப் பெய்யவேண்டு மிடங்களிற் சென்று பெய்வதுபோல. ஆசாரியர் * எண்டிசையும் பேர்த்தகரநான்குடையான் பேரோதிப் பேதைகாள்! தீர்த்தகரராமிர் திரிந்து * என்கிற பூதத்தாழ்வாருடைய நியமனப்படியே * ஸ்ரீரங்கம் கரிசைலமஞ்ஜநகிரிம்...ஸாலக்ராம கிரிம் நிஷேவ்ய ரமதே ராமாநுஜோயம்முநி: * என்னும்படியாக ஸகல திவ்ய தேசங்களிலும் ஸகல க்ஷேத்ரங்களிலுமெழுந்தருளி ஆத்மோஜ்ஜீவநார்த்தமாக அர்த்த விசேஷங்களைப் பொழிவர்.

3. மேகமானது மழைபெய்து பள்ளமான விடங்களையும் நிரப்புவதுபோல ஆசாரியரும் ஸதுபதேச வ்ருஷ்டிகளைச் செய்து நீசர்களையும் உத்துங்கர்களாக்குவர்.

4. மேகமானது எப்போதும் வர்ஷியாது; காலவிசேஷங்களிலே வர்ஷிக்கும். இங்ஙனே ஆசாரியரும் சில ஸமயவிசேஷங்களைக் குறிக்கொண்டு ஸதுபதேசவர்ஷங்களைச் செய்வர்.

5. மேகமானது ப்ராப்த காலங்களில் பெய்யாவிடில் உலகில் பலவகைப் பீடைகள் உண்டாகின்றன. அதுபோல ஆசாரியரும் ஸமயங்களில் ஸதுபதேசங்களைச் செய்தருளாவிடில், தேஹாத்மப்ரமம் ஸ்வஸ்வாதந்த்ர்ய ப்ரமம் அந்ய சேஷத்வ ப்ரமம் ஸ்வரக்ஷணே ஸ்வாந்வய யோக்யதாப்ரமம் முதலான பல பீடைகள் தோன்றும்.

6. மேகம் எவ்வளவு வர்ஷித்தாலும் த்ருப்தியடைவதுமில்லை; கைம்மாறு கருதுவதுமில்லை. அதுபோலவே ஆசாரியரும் கைம்மாறு கருதாமல் எவ்வளவு உபதேசித்தும் த்ருப்தியடையாமலே யிருப்பர்.

7. மேகம் சிலகாலங்களில் சில நீர்த்துளிகளைப்பெய்து ஓய்கிறது; மற்றொருகால், போதும்போது மென்னும்படியாக அபரிமிதமாய் வர்ஷிக்கிறது. இங்ஙனமே ஆசாரியரும் சிலஸமயம் மந்த்ரோபதேசமென்று சிஷ்யர் செவியிலே சில அக்ஷரங்களைச் சொல்லி நிற்பர்; மற்றொருகால் [காலக்ஷேபகர்ந்த ப்ரவசனம் செய்யுமிடத்து] ச்ருதி ஸ்ம்ருதீதிஹாஸபுராண உபய வேதாந்த ரஹஸ்ய ஸாரார்த்தங்களை அபரிமிதமாக வர்ஷித்து வியப்புறச் செய்வர்.

8. மேகம் வீதிகளிலே வர்ஷித்து ஜலத்தை நிஷ்ப்பலமாக்குகிறது; சிப்பிகளிற் பெய்து முத்துக்களை யுண்டாக்கி ரத்னமய பூஷணங்களுக்கு உதவுகிறது. இப்படியே ஆசாரியரால் சில வ்யக்திகளிடத்தில் உபதேசிக்கப்படும் அர்த்தங்கள் அநவதானத்தினாலும் விஸ்மரணத்தினாலும் அப்ரயோஜனமாகின்றன. சில மேதாவிகள்

பக்கலிலோ வென்னில், விசேஷமான புஷ்டியையடைந்து ஸ்ரீவசந பூஷணம், உப தேச ரத்தினமாலை என்னும் பெயர்களால் ஆத்மாலங்கார ஹேதுக்களாகின்றன.

9 மேகம் பெய்த நீர் நதிகளிலும் தடாகங்களிலும் கிணறுகளிலும் சென்று சேர்ந்து ஸர்வோபஜீவ்யமாகின்றது; வேறிடங்களிற் சேர்ந்து ஒருவர்க்கும் கொள்ளத்தகாததாக ஆகின்றது. அதுபோலவே ஆசார்யர் ஸத்பாத்ரங்களில் வர்ஷிக்கும். அர்த்தவிசேஷங்கள் ஆசார்ய பரம்பரையாய் க்ரஹித்து அநுபவிக்கத்தக்கதாயும், அபாத்ரங்களில் தந்த அர்த்தங்கள் பழுக்கக்காய்ச்சின இரும்பிலே விட்ட தண்ணீர்போல் அஸத் கல்பங்களாயும் ஆகின்றன.

10. மேகமானது *எத்தனையும் வான் மறந்த காலத்தும் பைங்கூழ்கள், மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும்* (பெருமாள் திருமொழி) என்கிறபடியே பயிர், சாதகபக்ஷி முதலிய அநந்யகதிகளால் எதிர்பார்க்கப்பட்டிருந்து அவற்றுக்கு உபகாரகமாயும், *நீர்காலத்து எருக்கிலம்பழவிலைபோல் வீழ்வேனை* (நாச்சியார் திருமொழி) என்கிறபடியே எருக்கஞ் செடிகளிற் பெய்து நஷ்டத்தை விளைப்பதாயும் ஆகிறது அதுபோல, ஆசார்யதிவ்ய ஸ்ரீஸூக்திகளும் அநந்யகதிகளால் குதூஹலத்தோடு எதிர்பார்க்கப்பட்டு உபயோகங்கொள்ளப் படுவனவாய், பிறரிடத்திலே பெருகி *சாறுவாகமத நீறுசெய்து சமணச்செடிக்கனல் கொளுத்தியே சாக்கிய்கடலை வற்றுவித்து மிகு சாங்கியக்கிரி முறித்திட* (ஆர்த்திப் பிரபந்தம்) என்கிறபடியே அநர்த்த ஹேதுக்களாய் முடியும் இங்ஙனே மற்றும் பலவகையான உவமைப்பொருத்தங்கள் காணலாம். இவற்றுக்கு ஸமந்வயம் நமது பூருவர்களிடத்தேயாம். ... ... *

4. தேசிக ஸூக்தியும் அப்பயதீக்ஷிதரும்

ஸ்வாமி தேசிகன் ஸாதித்தருளின யதிராஜஸப்ததியில் (38) *குத்ருஷ்டி குஹநாமுகே நிபதத: பரப்ரஹ்மண: கரக்ரஹவிசக்ஷணே ஜயதி லக்ஷ்மணேயம் முநி:* என்கிற ச்லோகவிஷயமான ஓர் ஐதிஹ்யம் கேண்மின். அப்பயதீக்ஷிதர் காஞ்சீபுரத்தில் தும்பைவனம் என்னுமக்ஹாரத்தைப் பரிதிஷ்டை செய்து அவ்விடத்தில் வாஸம்செய்து கொண்டிருக்கையில் உஞ்சவ்ருத்திபண்ணுகிற வொரு ஸ்ரீவைஷ்ணவர் யதிராஜஸப்ததி சொல்லிக்கொண்டு அவ்வீதியில் வருவராம். ஒரு நாள் அவருடைய க்ருஹத்தின் வாசலில் இந்த ச்லோகம் சொல்லுகையில் *கரக்ரஹ விசேக்ஷணே ஜயதி லக்ஷ்மணேயம் முநி:* என்றதைக் கேட்டதும், *ஐயங்காரே! இப்படிவாருங்கள்; *கரக்ரஹ விசக்ஷண:* என்று தேசிகர் ஸாதித்திருக்கமாட்டார்; அது ப்ராஸத்திற்குக் சேராது; *கசக்ரஹ விசக்ஷண:* என்றே அவர் ஸாதித்திருப்பர் இதுதான் ப்ராஸத்திற்குப் பொருந்தும், பொருளுக்கும் சேரும். தண்ணீரில் அமிழ்ந்தவனைத் தலைமயிரிலே பிடித்துத் தூக்குவது எங்குங் கண்டதாகையாலே *குத்ருஷ்டி குஹநாமுகே நிபதத: பரப்ரஹ்மண:* என்றதற்குச் சேர *கசக்ரஹ விசக்ஷண:* என்று தாணிருக்கத்தகும்; இனிமேல் இப்படியே சொல்லுங்கள் *என்று திருத்திக் கொடுத்தாராம். உஞ்சவ்ருத்தி ஸ்வாமி விசேஷஜ்ஞரல்லாமையாலே மஹாபண்டிதரென்று ப்ரஸித்தரான தீக்ஷிதருடைய வார்த்தையில் கௌரவாதிசயத்தாலே அவ்விதமாகவே பாடத்தைத் திருத்திக் கொண்டு *கசக்ரஹ விசக்ஷண:* என்றே சொல்லிவந்தாராம். அதைச் சில ஸ்ரீவைஷ்ணவவித்வான்கள் கேட்டு *என்ன ஸ்வாமிந்! புதியபாடமாயிருக்கிறதே, இது எங்கே கற்றது?* என்றார்களாம். அதற்கு இவர் தீக்ஷிதருடைய வார்த்தை கனைச் சொல்லி அவர் பெறுவித்த திருத்தம் என்றுகூற; அதற்கு அந்த வித்வான்கள் சொன்னதாவது—தீக்ஷிதர் வித்வானேயாகிலும் அரஸிகர்; ப்ராஸத்திற்கு ஆசைப்

பட்டு அர்த்தஸ்வாரஸ்யத்தை இழக்கலாகாது; தண்ணீரினுள் அமிழ்ந்தவனுடைய தலைமயிர் அகப்படுவதற்கு முன்னே அவனுடைய கைகள் தான் அகப்படும்: என்னைத் தூக்கிப் போடுவாருண்டோவென்று அவன் இருகைகளையும் உயரவெடுத்திருப்பன். *நிபதிதஸ்ய*என்னுதே*நிபதத:* என்று வர்த்தமான நிர்தேச மிருப்பதனால் கைதான் எளிதாக எட்டும். 'கரக்ரஹ' என்கிற பாடந்தான் மிகப்பொருத்தமானது என்று. இதைப் பிறகு தீக்ஷிதர் கேள்விப்பட்டு அர்த்த ஸ்வாரஸ்யம் கண்டறிவதற்கு ஸ்ரீ வைஷ்ணவர்களே இட்டுப் பிறந்தவர்கள்' என்று கொண்டாடி 'கரக்ரஹ' என்பதுதான் யுக்தமான பாடமென்று தலைதுலுக்கிச் சென்றாராம்.

5. ஸ்ரீராமாயணப்ரவசனத்திற்கு உரிமையுடையார் யார்?

ஸ்ரீராமாயணம் வைதிகமதஸ்தர்கள் யாவர்க்குமே ஆதரணீயமாய்ப் ப்ரவசனத்தில் வந்திருக்கின்றது ஸ்மார்த்தர் மாத்வர் முதலானயாவருமேஇதிஹாஸச்ரேஷ்டமான இந்த மஹாக்ரந்தத்தில் வாய் வைத்து இதைக்கொண்டு போது போக்கி வருகின்றார்களெனினும் ஸ்ரீவைஷ்ணவ மஹாசார்யர்கள் இந்த மஹாக்ரந்தத்தில் அவகாஹித்து ஆச்சர்யமான அர்த்தவிசேஷங்களை அருளிச்செய்தபடியால்தான் இந்த க்ரந்தத்திற்குத் தனிச் சிறப்பு உண்டாயிற்றென்று நிர்மத்ஸரர்களான பலரும் சொல்லிப் போருவர்கள்.

ஸ்ரீராமாயணத்தில் உள்ள பங்க்தியின்மேல்கிடைக்கிற சப்தார்த்தத்தைவிட அதிகமான அர்த்த விசேஷங்களை சாஸ்த்ரஸரணிக்குச் சேர உபந்யஸிப்பவர்கள் எந்த மதஸ்தர்களானாலும் ஆகுக; இவ்வர்த்த விசேஷங்கள் பரம போக்யமாக இருக்குமேயானால் அவை பட்டர் நம்பிள்ளை பெரியவாச்சான்பிள்ளை போல்வாரான ஸ்ரீவைஷ்ணவாசாரியர்கள் வழியாக வந்தவைகளாக இருக்குமேயல்லது வேறு விதமாக இருக்க ஔசித்யமில்லையென்று மதாந்தரஸ்தர்களும் பரவசர்களாய் ஸதஸ்ஸுக்களில் சொல்லக் கேட்டிருக்கிறோம்.

ப்ரஹ்மஸ்ரீ பரித்தியூர் கிருஷ்ண சாஸ்திரிகள் என்கிற மஹான் பரகதியடைந்து அறுபத்தைந்து வருஷங்களாயிருக்கும். ஸ்மார்த்தரான இம்மஹான் சிறந்த சாஸத்ரஜ்ஞராயிருந்ததோடுகூட ஸ்ரீராமாயணத்தை அற்புதமாகப் ப்ரவசனம் செய்வதில் மிக ப்ரஸித்தி பெற்றிருந்தார். சென்னையிலும் மற்றும் பல மஹா நகரங்களிலும் அவருடைய ப்ரவசநங்களை யநுபவித்து ஆனந்தித்தவர்கள் பலர். அவர் ஒவ்வொரு நாளும் ப்ரவசநமத்யே சொல்லுவராம் — பெரியவாச்சான் பிள்ளை யென்கிற மஹான் அவதரியாதிருந்தால் ஸ்ரீமத் ராமாயணம் வெறும் கடைவீதிப் புராணமாகத்தான் இருந்திருக்கும் என்று.

ப்ரஹ்மஸ்ரீ பண்டித லக்ஷ்மணஸார் [மத்வ ஸம்ப்ரதாயஸ்தர்] சென்னைமாநகரில் ப்ரவசனம் செய்து வந்தபோது ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயஸ்தர்கள் தாம் அவரிடம் அதிகமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்களாம். அவர் தமக்குப் பெரியவாச்சான் பிள்ளை கனவில் காட்சி தந்து ஸகலார்த்தங்களையும் கரதலாமலகமாகக் காட்டிக் கொடுத்ததாய்ச் சொல்லி ப்ரவசனந்தோறும் பெரியவாச்சான்பிள்ளை தனியனை உரக்கச் சொல்லிவிட்டே ஆரம்பம் செய்வர் என்பது ப்ரஸித்தம்.

இக்காலத்தவர்கள். ஸ்ரீவைஷ்ணவாசார்யர்களின் வியாக்கியானங்களை ஆழ்ந்துபாராமலே ஸாஹஸமாகச் சிலவார்த்தைகள் சொல்லுவதோடு நில்லாமல் எழுதியும் வைக்கிறார்கள்; 'மூலகாரருடைய அபிப்ராயத்தில் இல்லாத அர்த்தங்களை ஏறிட்டுரைக்கிறார்கள்' என்று. வாஸ்தவமாய் மூலகாரர் நெஞ்சில் கொள்

ளாத அர்த்தங்களைப் பெரியவாச்சான் பிள்ளை போல்வார் அருளிச் செய்கிறார்களென்பதை நாம் மறுக்கவேண்டிய அவசியமேயில்லை. 'ஏறிட்டுரைக்கிறார்கள்' என்பது மாத்திரமே ஸாஹஸமான வார்த்தை. "ஜாமாதா வேத்தி நோ பிதா" என்பதை த்ருஷ்டாந்தமாகக் கொண்டு "வ்யாக்.க்யாதா வேத்தி நோ கவி:" என்கிறார்களே, அது பொய்யன்று. ஸத்யமே. தனிச்லோகம் முதலான திவ்யக்ரந்தங்களில் பெரிவாச்சான்பிள்ளை பணித்துள்ள பொருள்களெல்லாம் வான்மீகி பகவானுடைய உள்ளத்தில் உறைந்தவையேயென்று யாரும் ப்ரதிஜ்ஞை பண்ண முடியாது. ஆனால் மஹா வாக்மிகள் வாய் வைத்து விசேஷார்த்தங்களை வாரியிறைப்பதற்குப் பாங்காகச் சொல்தொடைகளை அமைத்த அதிசயம் வான்மீகி முனிவர்க்கே அஸாதாரணம் அவருடைய திருவாக்குக்கு ஒருவருடைய புத்திக்கு மெட்டாத அர்த்த விசேஷங்களை யருளிச் செய்த ஆசாரியர்களின் மேதையைப் பற்றிப் பேசவேணுமானால் "என் மதிக்கு விண்ணெல்லா முண்டோ விலை" என்ற திருமழிசைப் பிரான் பாசுரந்தான் எடுத்துரைக்கத்தக்கது. ஸ்ரீ ராமாயண அயோத்யா காண்டத்தில் (68—14.) * **ஸராம்ஸி ச ஸுபுல்லாநி நதீச்ச விமலோதகா:, நிரீக்ஷமாணா ஜக்முஸ் தே தூதா: கார்யவசாத் த்ருதம்** * என்றொரு ச்லோகமுள்ளது. தசரதசக்கரவாத்தி துஞ்சின பின்பு பரதாழ்வானை மாதுல க்ருஹத்தில் நின்றும் அழைத்துக்கொண்டு வருவதற்காகப் புறப்பட்டுச் சென்ற தூதர்களின் செய்தியைச் சொல்லும் ச்லோகமிது. 'நல்ல மலர்களையுடைய பொய்கைகளையும் நிர்மலமான தீர்த்தத்தையுடைய நதிகளையும் பார்த்துக்கொண்டே அந்த தூதர்கள் கார்ய வசத்தாலே விரைந்து சென்றார்கள், என்பது ச்லோகத்திற் கிடைக்கும் பொருள். மூலத்தில் **நிரீக்ஷமாணா: ஜக்மு:** என்று ஸ்பஷ்டமாகவுள்ளது—பார்த்துக்கொண்டே போனார்கள் என்பதே இதன் பொருள். ஆனால் இதற்கு நம்பிள்ளை யருளிச்செய்யும் பொருள் திருவாய்மொழியீட்டில் (6-1-7ல்) விலக்ஷணமாகவுள்ளது. "**நிரீக்ஷமாணா இத்யாதி** — பாராதே போனார்களென்கை" என்பது ஈட்டு ஸ்ரீஸூக்தி. இதைப் பார்க்கும் புல்லறிவாளர்கள் "நம்பிள்ளை அநியாயமாய் ஏமாந்து போனார்; பார்த்துக்கொண்டே போனார்களென்று எழுதவேண்டியிருக்க, பாராதே போனார்களென்று ஏதோ ப்ரமித்து எழுதிவிட்டார்" என்றே கைதட்டிப் பேசுவர்கள். இதை மஹாரஸிகர்கள் கண்டால் அந்தோ! இது என்ன மேதையின் மாண்பு! என்று உள்குழைந்து உருகுவர்கள்.

இங்கே சிறிது ஆராய்வோம்; ***ஸராம்ஸி ச ஸுபுல்லாநி*** இத்யாதி ச்லோகத்தை வான்மீகி பகவான் இங்கே எதற்காக எழுதினாரென்று பார்ப்போம். பரதாழ்வானை யழைத்துவரச் சென்ற தூதுவர்கள் கனவேகமாக ஓடிக் கொண்டிருக்கிறார்கள். வழியிலோ மிக ரமணீயங்களான ஸந்நிவேசங்கள் பல பல கிடக்கின்றன. அவற்றில் இவர்கள் கண் செலுத்தப் புக்கார்களாகில் ஓரடியும் பெயர்ந்து செல்ல முடியாது. வான்மீகிக்கு வழியினழகையும் வருணிக்க ஆசை. தூதுவர்கள் அவ்வழகில் கண் செலுத்தாதே விரைந்து சென்றபடியையும் சொல்லவேண்டியிருக்கிறது. ஆனால் அவர்கள் கண்ணை மூடிக்கொண்டு சென்றார்களல்லர். கண்ணைத் திறந்து கொண்டு தான் செல்கின்றனர். கண்ணோ அவ்வழகில் படிவதில்லை. இவ்வர்த்தத்தை யுட்கொண்டு "நிரீக்ஷமாணாஸ் தே ஜக்மு:" என்றார் கவிஸார்வ பௌமர். அவரது உட்கருத்தைச் சிக்கனப் பிடித்து அற்புதமாகவருளிச் செய்யுமாற்றல் பெற்ற பேராசிரியர்கள் "பாராதே போனார்களென்கை" என்றருளிச் செய்தார்கள். வேறு எந்த வ்யாக்யாதாவும் இப்படி யெழுதக் கற்றிலர். 'பார்த்துக்கொண்டே போனார்கள்' என்றுதான் பிறர் எழுதக் கடமைப்பட்டவர்கள். இதில் யாருடைய மேதை வியக்கத்தக்கதென்பதை ரஸிகர்கள் குறிக்கொள்ளவேணும். மற்றோரிடமும் அற்புதமென்னக் காட்டுகிறேன் (அடுத்த இதழில்) ... ... *